க வெளியீடு: ௨௪௭

# படியாதவர் படும் பாடு

## THE WOES OF THE ILLITERATE

இராமகிருஷ்ண வித்யாலயம் நிலைபெறுத்தி நடத்துபவரும்,
எழுத்தறி வியக்கத்தில் ஈடுபட்டுழைப்பவருமாகிய
திருவாளர் தி. சு. அவிநாசிலிங்கஞ் செட்டியார்,
பி. ஏ., பி. எல்., எம். பி.,
அவர்கள் எழுதிய
முகவுரையுடன்

MADURAI UNIVERSITY
2 FEB 1973
MADURAI-2

Book supplied by the University
central Co-op. Stores, Madurai.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

30750

First Edition: Jan., 1940.
Reprints: Jan., 1941; Aug., 1945; June, 1954; Jan., 1956.

PADIYATHAVAR PADUM PADU

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET, THIRUNELVELI.

75972

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 1200.

# பதிப்புரை

விலங்குகளென வாழ்ந்து வந்த நீக்ரோவர்களும் அறி வொளி பெற்றுத் திகழும் நூற்றாண்டு இது. இந் நூற்றாண் டிலும் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கல்லாதவராக வாழும் நாடு இந் நாடே. இக் காரணத்தால், நம் முன்னோர்களின் பண்டைப் பெருமைகளை எடுத்துக் கூறி உயர்வுபெறவும் நமக்கு வாய் இல்லை; பலவகைத் துறைகளிலும் முயன்று உழைத்துச் சிறப்படையவும் நமக்கு வழி இல்லை. ஆதலின், இந்த இழி நிலையை ஒழித்தலே நமது முதற் கடமையாகும்.

இதற்குரிய வழி என்ன? 'எழுத்தறி வியக்கம்' எங்கும் பரவு தல் வேண்டும். 'கல்லாமை ஒழிக' என்ற முழக்கம் எங்கும் பெருகுதல் வேண்டும். "தேடு கல்வி யிலாததொ ரூரைத், தீயினுக் கிரையாக மடுத்தல்" என்று பாடியருளிய பாரதியார் கருத்தும் இதுவே.

எழுத்தறி வியக்கத்துக்குத் துணை செய்வன பலவாகும். அவற்றுள், கல்லாமையின் பொல்லாத் தன்மையை விளக்குங் கதைகளும், கட்டுரைகளும் ஒரு வகையின. 'படியாதவர் படும் பாடு' என்னும் இந் நூல் அவ் வகையைச் சார்ந்ததே.

படியாதவர் வாழ்வில் நேரும் இடையூறுகள் பல கதைகள் வாயிலாகவும், உரையாடல்கள் வாயிலாகவும் இந் நூலின்கண் விளக்கப் பெற்றுள்ளன; இடையிடையே சில கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன; சான்றோர் செய்யுட்கள் சில உடன் சேர்க் கப் பெற்றுள்ளன.

இவற்றிற்கு வேண்டிய குறிப்புக்கள் தந்துதவிய தமிழாசிரியர் திருவாளர் சேலை. சகதேவ முதலியார், கோவை வழக்கறிஞர் இராவ் பகதூர் C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி. ஏ., பி. எல்., கோவை திருவாளர் S. நடராச பிள்ளை, பி. ஏ., எல். டி., ஆகிய இவர்கட்கும், 'கல்வியே கண்' என்பது பற்றி இனிய பாடல்களை இயற்றி யுதவிய சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கட்கும், திருவாளர் சி. து. கன்னிசாமி அவர்கட்கும், அனைத்துந் தொகுத்துதவிய திருவாளர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கட்கும் நன்றி செலுத்துகிறோம்.

இதன்கண் சேர்த்துக்கொள்ளச் சில படங்கள் தந்துதவிய சென்னை நூல் நிலைய சங்கத்தார்க்கும், டாக்டர் மரியா மாண்டிசாரி அம்மையார் படம் தந்துதவிய மெயில் பத்திரிகை நிலையத்தார்க்கும் நன்றி செலுத்துகிறோம்.

இந் நூல், எழுத்தறிவியக்கத்தில் ஈடுபட்டுத் தொண்டு செய்வோர், கல்வி யறிவு பெறும் இளைஞர், முதியோர் ஆகிய இவர்கட்குப் பெரிதும் பயன்படும் என நம்புகிறோம்.

கல்வித் துறையில் ஆராய்ச்சி மிக்கவரும், எழுத்தறிவியக்கத்தில் பெரிதும் ஈடுபட்டு உழைப்பவரும், கோவை பெரிய நாயக்கன்பாளையத்தில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தை நிலைபெறுத்தி நடாத்தி வருபவருமான திரு. தி. சு. அவினாசிலிங்கஞ் செட்டியார், பி. ஏ., பி. எல்., எம். பி., அவர்கள் இதற்கு முன்னுரை எழுதி யுதவி அணிசெய்தார். அன்புடன் அதனை எழுதித் தர இசைந்த அவர்கட்கு நன்றி செலுத்துகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# முன்னுரை

முதியோர் கல்வியைப் பரப்புவதில் பலர் முனைந்து நிற்கும் இக் காலத்திலே, "படியாதவர் படும் பாடு" என்பது போன்ற பல புத்தகங்கள் மிக அவசியமானவை. இது முதியோர் கல்வியைப்பற்றிப் பிரசாரஞ் செய்பவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்படக்கூடியதா யிருக்கின்றது. இது படிப்பதற்கும் இனிமையா யிருக்கிறது. இதிலடங்கியுள்ள கதைகளும், கட்டுரைகளும், பாட்டுக்களும் கற்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் கல்வி யறிவில் பெரிதும் விருப்பத்தை யுண்டுபண்ணும். பலருக்கும் இது பயன்படுமென்று நம்புகிறேன்.

வித்யாலயம்,
25—1—1940

தி. சு. அவினாசிலிங்கம்.

UNIVERSITY LIBRARY.
MADURAI-2.

# உள்ளுறை

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கல்வி இல்லா நல்லப்பர் | .... | 9 |
| 2. | இளைஞன் உற்ற இடர் | .... | 23 |
| 3. | வண்டிக்காரன் துன்பம் | ... | 27 |
| 4. | கைத்தொழிலும் கல்வி யறிவும் | .... | 34 |
| 5. | படம் பார்த்த பாட்டியார் | .... | 47 |
| 6. | இருபத்தைந்தாம் தற்குறி | ... | 53 |
| 7. | கிழவி பட்ட கடன் | .... | 57 |
| 8. | அழியாச் செல்வம் எது? | ... | 61 |
| 9. | படியாத வேலையாள் | ... | 64 |
| 10. | கல்லாதவர் வாக்குரிமை | .... | 71 |
| 11. | கல்வியே கண் (பாட்டு) | .... | 75 |
| 12. | கல்வி யில்லையேல் வாழ்வில்லை | ... | 86 |

# விளக்கப் படங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| புகைவண்டி நிலயத்தில் ஒருவன் நல்லப்பருக்குச் சீட்டு வாங்கித் தருதல் | ... | 14 |
| நல்லப்பர் சென்ட்ரல் நிலயத்தில் தண்டங் கொடுத்தல் | ... | 16 |
| நல்லப்பர் குழாயில் தண்ணீர் பிடித்தல் | ... | 18 |
| முறைமன்றத் தலைவர் நல்லப்பரை விசாரித்தல் | ... | 20 |
| நல்லப்பர் பள்ளிக்கூடம் | ... | 22 |
| மைசூர் மகாராஜா மாளிகை | ... | 28 |
| தானே தமிழ் கற்கும் முறை | ... | 32 |
| மார்க்கோனி—ஸ்டீபென்சன் | ... | 34 |
| பத்திரிகை விற்கும் பதினான்கு வயதுள்ள எடிசன் - சுரங்க விளக்கு, மின் விளக்கு, மின்வண்டி முதலிய பொறிகளியற்றிய எடிசனார் | ... | 36 |
| வேலை தேடித் திரியும் பர்பாங்க் - செடி கொடிகளில் புதிய பல இனங்களைப் படைத்த பர்பாங்க் | ... | 37 |
| ரேடியம் கண்ட கியூரி அம்மையார் | ... | 38 |
| ருக்மணி குக்கரும்—அ. சோமசுந்தரஞ் செட்டியாரும் | ... | 39 |
| கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள் செய்துதவிய தஞ்சை ஆப்ரஹாம் பண்டிதர் | ... | 40 |
| அமிருதாஞ்சனமும்—நாகேஸ்வரராவ் பந்துலும் | ... | 41 |
| சார்லஸ் டிக்கன்ஸ் லேபல் ஒட்டுதல், சார்லஸ் டிக்கன்ஸ் நாவல் எழுதுதல் | ... | 42 |
| பள்ளியைப் பார்த்த புக்கர் வாஷிங்டன் பட்டம் பெற்ற புக்கர் வாஷிங்டன் | ... | 44 |
| மேனாட்டு ரிக்ஷா இழுப்பவன் பத்திரிகை படித்தல், நம் நாட்டு ரிக்ஷா இழுப்பவன் சோம்பி உறங்குதல் | ... | 46 |
| 'சொல்லாத சொல்' படக் காட்சி | ... | 48 |
| படியாத பிள்ளைகள், படித்த பிள்ளைகள் | ... | 54 |
| படியாத பெண்கள், படித்த பெண்கள் | ... | 58 |
| படியாத ஆடவர், படித்த ஆடவர் | ... | 65 |

பக்கம்

கந்தன் தவருகப் பேதி மருந்தை உட்கொள்ளுதல் ... 68
ஓட்டு அளிக்கும் இடம் ... 72
கவி தாகூர் மயிலாப்பூர் திருவள்ளுவர் கழகத்தில் வரவேற்பளிக்கப் பெறுதல் ... 78
சர். சி. வி. இராமன் ஸ்வீடனில் நோபெல் பரிசு பெற்று, அப் பரிசு பெற்ற மற்றவர்களோடு நிற்றல் ... 79
டாக்டர் மரியா மாண்டிசாரி அம்மையார் சென்னை நகர் மன்றத்தினரால் வரவேற்பளிக்கப் பெறுதல் ... 82
சுவாமி விவேகாநந்தர் அமெரிக்காவில் சிகாகோ நகரில் வரவேற்பளிக்கப் பெறுதல் ... 83
படியாத குடும்பம் ... 88
படித்த குடும்பம் ... 89
பரோடா மன்னரும் அவரமைத்த தபோய் நகர நூல் நிலையமும் ... 95

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-2

# படியாதவர் படும் பாடு

## 1. கல்வி இல்லா நல்லப்பர்

### க. கல்லாமைக்கு வருந்தாமை

திருவள்ளூரை அடுத்த வெள்ளத்தூரில் பெருஞ் செல்வர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் நல்லப்ப ரெட்டியார். அவர் எல்லாருக்கும் நல்லவராக வாழ்ந்துவந்தார். அவருடைய குடும்பம் எல்லாச் சிறப்பும் பெற்றிருந்தது; ஆனால், கல்விச் சிறப்பைப் பெறவில்லை. ரெட்டியாரும் எழுத்தறியாமலே காலங் கழித்தார். கல்லாமை ஒரு குறை என்று அவருக்குத் தோன்றவில்லை.

கோட்டி ரெட்டியார் என்னும் பெயருடைய ஒருவர் அவருக்கு நண்பர். அந்த நண்பர் நன்கு கற்றவர். அரசியல் உதவிச் சம்பளம் (பென்ஷன்) பெற்று, அவ்வூரில் மதிப்பாக வாழ்ந்திருந்தார். அவருடைய முன்னோர் வறுமையால் வருந்தியவர். அவர் எவ்வாறோ அரும்பாடு பட்டுத் தமிழும் ஆங்கிலமும் கற்று, அலுவல் பார்க்க முடிந்தது. அவர் நல்லப்பரைக் காணும்போதெல்லாம், அவருடைய மக்களையேனும் படிக்க

வைத்தல் வேண்டும் என்று வற்புறுத்திக் கூறிவந்தார். ஆனால், அச்சொல் நல்லப்பர் செவிக்கு ஏறவில்லை. "என் மக்களுக்குக் குறை என்ன? இருக்கிறதைக் காப்பாற்றி வைத்துக்கொண்டிருந்தால், அவர்களுக்கும் வரும்; அவர்கள் பேரன்மார்களுக்கும் வருமே!" என்று நல்லப்பர் அவரிடம் கூறுதல் உண்டு.

வெள்ளத்தூர் பத்துப்பதினைந்து தெருக்கள் கொண்டது. ஒரு கோடியில் நல்லப்பர் வீடு; மற்றொரு கோடியில் கொட்டி ரெட்டியார் வீடு; ஆகவே, பத்தில் எட்டில்தான் நல்லப்பரும் கொட்டி ரெட்டியாரும் ஒருவரை ஒருவர் கண்டு பேசுவர்.

## உ. கொடுத்த கடனை இழந்து வருந்துதல்

வெள்ளத்தூரில் ஒருவனுக்கு நல்லப்பர் கடன் கொடுத்திருந்தார். கடன் வாங்கினவன் பல ஆண்டுகளாக வட்டியும் கொடாமல், இதோ அதோ என்று கெடு வைத்துக்கொண்டு வந்தான். நல்லப்பர் எத்தனை நாள் பொறுக்கக்கூடும்! அவர் திருவள்ளூர் முறைமன்றத்தில் (கோர்ட்டு) வழக்கறிஞர் (வக்கீல்) ஒருவர் வாயிலாக வழக்குத் தொடர்ந்திருந்தார். ஒருநாள் அந்த வழக்கறிஞரிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. அந்தக் கடிதத்தில் அவருடைய வழக்கு விசாரணை சூன் 13-ஆம் நாள் என்று கண்டிருந்தது. அக் கடிதத்தை நல்லப்பர் ஒரு பள்ளிக் கூடத்துப் பையனைக் கூப்பிட்டுப் படிக்கச் சொன்னார். அவன் 13-ஆம் நாள் என்பதைத் தவறாக 18-ஆம் நாள் என்று படித்துக் கூறிவிட்டான்.

அந்த 18-ஆம் நாளன்று நல்லப்பர் முறைமன்றத்துக்குச் சென்று வழக்கறிஞரைக் கண்டார். "ஏன் ஐயா, நல்லப்ப ரெட்டியாரே! நான் எழுதிய கடிதம் உமக்குச் சேரவில்லையா?" என்று வழக்கறிஞர் கேட்டார். அதற்கு நல்லப்பர், "அதிற்

கண்டிருந்தபடியே ஜூன் 18-ஆம் நாள் நான் வந்திருக்கிறேனே," என்றார். வழக்கறிஞர், "அட! பைத்தியமே! 13-ஆம் நாள் என்றுதானே எழுதினேன். அந்தக் கடிதம் எங்கே! காட்டும்," என்றார். நல்லப்பரோ அந்தக் கடிதத்தைக் கொண்டுவரவில்லை. "ஜூன் 13-ஆம் நாளே ஆய்வு (விசாரணை) நடந்துவிட்டது; தடை மனுவுக்குப் பதில் சொல்ல நீர் வாராமையால் வழக்குத் தள்ளப்பட்டது; ஊருக்குப் போய்க் கடிதத்தை எடுத்துப் பாரும்," என்று வழக்கறிஞர் கூறிவிட்டார். கடன் கொடுத்த பணம் போய்விட்டதைக் குறித்து நல்லப்பர் மிகவும் வருந்தினார்.

## ந. தந்தியைக் கண்டு அழுதல்

வெளியூர்களில் நல்லப்பருக்குப் பல உறவினர்களும் நண்பர்களும் இருந்தார்கள். அவர்களைப் பற்றிய செய்திகளை அறிய வேண்டும் என்பதில் அவருக்கு ஆவல் உண்டு. ஆனால், அவர் தாமே கடிதங்கள் எழுத அறியாமையால், வாளா இருந்துவிடுவார். இக்காரணத்தால், அவர்களும் அவருக்கு அடிக்கடி கடிதங்கள் எழுதுவதில்லை. எப்போதேனும் ஒரு கடிதம் அவருக்கு வருதல் உண்டு. அவ்வாறு கடிதம் வந்தால், அதனை மிக்க பரபரப்புடன் வாங்குவார்; பக்கத்து வீடுகளுக்கு விரைந்து சென்று கற்றவர்களைத் தேடித்தேடி அலைவார்; யாரேனும் ஒருவர் கடிதத்தைப் படித்துச் செய்தியைக் கூறிய பிறகு ஒருவாறு அமைதியடைவார்; உடனே, அவர் படித்துக் கூறியது உண்மையோ அன்றோ என்று ஐயுறுவார்; முன்பு உண்மை என்று நம்பியதால் கொடுத்த கடனை இழந்து வருந்த நேர்ந்ததை நினைத்துக் கொள்வார்; மற்றும் ஒருவர் இருவரிடம் சென்று அதனையே படித்துக் கூறுமாறு வேண்டுவார். அவர் இவ்வாறு ஐயுற்று அலைதலை அறிந்தவர்கள் படித்துக்கூற மறுத்துவிடுதலும் உண்டு.

அத் தெருவில் வாழும் சிலருக்கு நாலைந்து முறை தந்திச் செய்திகள் வந்தபோது அவர் உடன் இருந்து அவற்றைப் பார்த்திருந்தார். அச் செய்திகள் இழவுச் செய்திகளாகவே இருந்தன. ஒருநாள் நல்லப்பருக்கே ஒரு தந்தி வந்தது. அதை அவர் கண்டவுடன் அழத் தொடங்கிவிட்டார். அப்போது அருகே இருந்தவர் ஆங்கிலம் தெரிந்தவர். அவர் அதை உடனே பிரித்துப் பார்த்தார்; கடகட என்று நகைத்தார்; "ஏன் ஐயா அழுகிறீர்! உம்முடைய பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்து நலமாக இருப்பதாக இச் செய்தி கூறுகிறதே! நீர் அழுவதைக் கண்டால் சிறுவரும் சிரிப்பாரே! நல்ல நல்லப்பர் ஐயா! எங்களுக்குக் கற்கண்டு கொடுத்து விட்டு மறுவேலை பாரும்," என்றார். நல்லப்பர் தம் அறியாமையை அறிந்து வெட்கித் தலைகுனிந்தார்.

## ௩. பொய்மனுவில் கைக்குறி வைத்தல்

வெள்ளத்தூரில், சிவபெருமான் கோவில் ஒன்று உண்டு. அதற்கு அறச் செயலாளர் (தருமகர்த்தர்) நல்லப்பருக்கு நண்பராகிய கொட்டி ரெட்டியாரே. அவர்மேல் பலருக்குப் பொறாமை இருந்தது. அவர்கள் ஒன்றுகூடி, கோவில் கணக்குத் தணிக்கையாளருக்கு (ஆடிட்டருக்கு) மனு ஒன்று எழுதினார்கள்; அதில் கோவில் வருமானத்தைக் கொட்டி ரெட்டியாரும் குருக்களும் தாங்களே பங்கிட்டுக் கொள்கிறார்கள் என்றும், சிறப்பும் பூசனையும் செம்மையாகச் செய்வதில்லை என்றும் எழுதினார்கள். அந்த மனுவில் அவர்கள் மற்றவர்கள் கையெழுத்துக்களுடன் நல்லப்பரை ஏமாற்றி அவர் கைக் குறியையும் பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள்.


இரண்டொரு நாட்கள் கடந்து கொட்டி ரெட்டியார் நல்லப்பர் வீட்டுக்கு வந்தார்; வந்தவர், "நல்லப்பா! சிலர் என்

மீது தப்பு மனு எழுதினர்களாம். அதில் நீயும் கைக்குறி வைத்தாயாமே! அவ்வாறு நீ செய்யலாமா?" என்றார். அதற்கு, நல்லப்பர், "என்னவோ நிலத்தீர்வைக் கழிவு மனு என்று சொன்னர்களே! இப்படி என்று தெரிந்திருந்தால் நான் செய்திருப்பேனா?" என்று வருந்தினர். கொட்டி ரெட்டியார் சினங்கொண்டவராய்ச் சரேலென்று நல்லப்பர் வீட்டைவிட்டுப் போய்விட்டார்.

## ரு. புகைவண்டி நிலையங்களில் திகைத்தல்

இவ்வாறு நடந்த நிகழ்ச்சிகளினலோ, அல்லது வேறு காரணத்தாலோ சில நாட்களில் நல்லப்பருக்கு மன வெறுப்பு உண்டாயிற்று. அவருக்குப் பழமையான நண்பர் ஒருவர் சென்னையில் இருந்தார். அவரிடம் போய்ச் சில நாட்கள் தங்கியிருந்து, பட்டணத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வர வேண்டும் என்று நல்லப்பருக்கு ஓர் எண்ணம் எழுந்தது. சென்னையில் சனவரி வேடிக்கையைப் பார்க்கவேண்டும் என்னும் அவாவும் அவருக்கு உண்டு. ஆகையால் நல்லப்பர் செலவுக்கு வேண்டிய பணமும், துணிமணிகளும் எடுத்துக்கொண்டு சனவரிக்கு முந்தியே பட்டினம் போய்வர ஒரு நாள் புறப் பட்டார்; பகல் பன்னிரண்டு மணிக்குத் திருவள்ளூர்ப் புகை வண்டி நிலையத்துக்கு வந்து சேர்ந்தார்.

அவர் புகைவண்டி நிலையத்துக்கு வந்து சேர்ந்தவுடனே வண்டிவரும் மணி அடித்துவிட்டது. சீட்டு வாங்குமிடத்தில் கூட்டம் பெருகி யிருந்தது. நல்லப்பர் அங்கு நின்ற ஒருவ னிடம் ஒரு ரூபாய் கொடுத்துப் பட்டினத்துக்குச் சீட்டு வாங்கிக் கொடுக்கச் சொன்னர். அவன் ஓர் அணு கொடுத்துப் பக்கத்து நிலையத்துக்குச் சீட்டு வாங்கிக் கொண்டுவந்து,





புகைவண்டி நிலையத்தில் ஒருவன் நல்லப்பருக்குச் சீட்டு வாங்கித் தருதல்

அதனையும் ஐந்தணா சில்லறையையும் கொடுத்துவிட்டு மறைந்து விட்டான். வண்டி வந்துவிட்டது; நல்லப்பர் விரைந்து ஓடினார்; முதல் வகுப்பு வண்டியில் ஏறப்போனார். உடனே, சேவகன் ஒருவன் சீட்டைக் காட்டச் சொல்லிப் பார்த்துவிட்டு, "மூன்றாம் வகுப்புக்குப் பணம் கொடுத்து முதல் வகுப்பு வண்டியில் ஏறுகிறீர்; நல்ல வேலை ஐயா!" என்று கூறி, பக்கத்து வண்டியில் ஏறச் சொன்னான். அவர் அப்படியே ஏறி, வண்டியில் அமர்ந்தார்.

புகைவண்டி, பட்டினம் சென்ட்ரல் ஸ்டேஷன் வந்து சேர்ந்தது. அவர் வண்டியை விட்டிறங்கிச் சீட்டு வாங்குபவரிடம் அதைக் கொடுத்துவிட்டுப் போகத் தொடங்கினார். அப்போது, "தின்னனூருக்குச் சீட்டு வாங்கிக்கொண்டு இங்கே வந்து இறங்கினீர்; நில்லும்," என்று சீட்டு வாங்குபவர் சொன்னார்; அங்கிருந்த கூட்டம் போய்விட்ட பிறகு, 'குறைப் பணத்துக்கு இரட்டிப்பாக இரண்டு ரூபாய் கொடுத்துவிட்டுப் போக" என்றார். நல்லப்பர் என்ன செய்வார்? சொன்னபடியே கொடுத்துவிட்டு வெளியே சென்றார்.

## ௬. சென்னையைச் சுற்றிப்பார்த்தல்

அவருடைய நண்பர் வீடு இராயபுரத்தில் இருந்தது. இதற்குமுன் எப்போதோ ஒரு முறை அவர் நண்பர் வீட்டிற்குச் சென்றது உண்டு. அப்போது அவருக்குத் துணையாக வேறொருவர் உடன் சென்றிருந்தார். இப்போதோ, நண்பர் வாழும் தெருவின் பெயர் மட்டும் நினைவில் இருந்தது; அதற்குரிய வழி ஒன்றும் தெரியவில்லை. தெருக்களின் பெயர் எழுதியிருக்கும் பலகைகளைப் பார்த்து வழி தெரிந்துகொள்வதற்கு அவரால் இயலவில்லை. ஆகையால், பல இடங்களிலும்




நல்லப்பர் சென்ட்ரல் நிலையத்தில் தண்டங் கொடுத்தல்

திரிந்து திரிந்து, அலைந்து அலைந்து, விளக்கு வைக்க நண்பர் வீட்டை அடைந்தார். அவருடைய களைப்பை அறிந்த நண்பர் அவருக்கு வேண்டுவன செய்து களைப்பைப் போக்கினர். பிறகு குடும்பச் செய்திகளைக் கேட்டுக்கொண்டும், பிற செய்திகளைக் குறித்துப் பேசிக்கொண்டும் இருவரும் மகிழ்ந்தனர்.

நண்பர் அவரை அழைத்துக்கொண்டு சென்று, காணத் தகுந்த இடங்களை யெல்லாம் காட்டினர். தொழிற்பொறிகள் (இயந்திரங்கள்) வைத்திருக்கும் இடத்துக்குச் சென்று, அங்கு அவைகளைப்பற்றிய செய்திகளை யெல்லாம் அந்த நண்பர் நல்லப்பருக்கு எடுத்துக் கூறி விளக்கினர். பயிர்த்தொழிலுக்குப் பொறிவைத்து வேலை செய்யலாமே என்று எண்ணினர் நல்லப்பர். இருவரும் பல பொருட்காட்சிச் சாலைகளை (மியூஸியம்) யெல்லாம் பார்த்தனர்; விலங்குக் காட்சிச் சாலை சென்று பார்த்தனர்; கப்பல் போக்கு வரத்துக்களையும் நண்பர் நல்லப்பருக்குக் காண்பித்தார்; அஞ்சல் நிலையம் (தபாலாபீஸ்) மீன் காட்சிச் சாலை, பெரிய அச்சுப் பொறிகள், ஒலிபரப்பு நிலையம் (ரேடியோ ஸ்டேஷன்) முதலிய பலவற்றினையும் காண்பித்தார்.

## எ. குளிரும் காய்ச்சலும் விலைக்கு வாங்குதல்

நண்பர் வீட்டில் தங்கியிருந்த நாட்களில், ஒருநாளிரவு நல்லப்பருக்குத் தாகம் மிகுந்தது. அவர், கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து சிறிது தூரம் தெரு வழியே போனர். நீர்க் குழாய் ஒன்று அவருக்குத் தென்பட்டது. அதன்மேல் "இது குடிக்கும் தண்ணீர் அன்று," என்று எழுதியிருந்தது. அதனை என்னவோ என்று நினைத்துக்கொண்டு, அவர் குழாயை அடித்து வேண்டிய வரையில் தண்ணீர் குடித்து




நல்லப்பர் குழாயில்
தண்ணீர் பிடித்தல்

விட்டு வந்து படுத்துக் கொண்டார்.

விடியற் காலையில் குளிரும் காய்ச்சலும் வந்து நல்லப்பரை வாட்டின. குழாய்த் தண்ணீரைக் குடித்தமையால் நல்லப்பர் நோயுற்ருர் என்பதை அவர் நண்பர் அறிந்தார்; நல்லப்பர் கைகள் வெட வெட என்று நடுக்கம் எடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்; மிகவும் வருந்திஞர்; வந்தவர் நல்ல படியே சில நாட்கள் தங்கியிருக்க முடியவில்லையே என்று எண்ணிஞர்; உடனே மருத்துவர் ஒருவரை விரைவில் அழைத்து வந்து பார்க்கச் சொன்ஞர். அந்த மருத்துவர், "இந்த மருந்தைத் தேனில் கலந்து கொடுங்கள். மாலையிலேயே நோய் நீங்கிவிடும்" என்று கூறிச் சென்ருர். அவ்வாறே செய்ய, நோயும் நீங்கியது.

## அ. நண்பருக்கு இழைத்த தீங்கு

இரண்டு நாட்கள் கழித்து, நல்லப்பர், தாம் ஊருக்குத் திரும்பவேண்டுமென்று கூறி, நண்பரிடம் விடை கேட்டார். அந் நண்பர், அவருடன் வண்டி வரைக்கும் சென்று, "உடம்பைப் பார்த்துக்கொள்ளுங்கள்," என்று கூறி வழியனுப்பினர்.

நல்லப்பர் அன்று மாலை வீடு வந்து சேர்ந்தார். உள்ளே நுழைந்தாரோ இல்லையோ, காலையில் சேவகன் ஒருவன் வந்ததாகவும், அவன் மாலையில் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனதாகவும் மனைவியார் கூறினர். இதைக் கேட்டுக்கொண்டிருக்கும்போதே, சேவகன் ஒருவன் தெரு நடையில் வந்து, "நல்லப்ப ரெட்டியார்!" என்று கூப்பிட்டான். நல்லப்பர் வெளியே வந்ததும், சேவகன் உத்தரவு ஒன்றை அவர் கையில் கொடுத்து, வேறொன்றில் கையெழுத்திடுமாறு கூறினன். "எனக்கு எழுதத் தெரியாதே," என்றார் அவர். உடனே, சேவகன் அவருடைய விரற்குறி பெற்று, ஊராரிடம் சான்று வாங்கிக்கொண்டு சென்றான். அன்றிரவு முழுதும் நல்லப்பர் உறங்கவில்லை. அந்த உத்தரவை அவர் ஒருவரிடத்திலும் காட்டினரில்லை ; மிகவும் பயந்துவிட்டார்.

பொழுது விடிந்ததும், அவர் தம் நண்பரிடம் போனர். கொட்டி ரெட்டியார் இவரைக் கண்டதும், உள் கூடத்துக்கு அழைத்துச் சென்றார். நல்லப்பர் உத்தரவைக் கொடுத்து, அஃது என்ன என்று அறிய விரும்பினர். "நீர்தான் மனுவில் கைக்குறி வைத்தீரே! அது நாளைக்கு விசாரணை. முறை மன்றத்தில் (கோர்ட்டில்) கேட்கும் கேள்விகளுக்கு விடை சொல்ல வேண்டும். அவ்வளவுதான்," என்றார் கொட்டி ரெட்டியார்.



முறைமன்றத் தலைவர் நல்லப்பரை விசாரித்தல்

"ஐயையோ! நான் என்ன சொல்லப்போகிறேன்!" என்றார் நல்லப்பர். "என்ன சொல்வது? நானும் குருக்களும் சேர்ந்து கோயில் சொத்தைச் சாப்பிட்டுவிட்டதாகச் சொல்லவேண்டியதுதான்," என்றார் கொட்டி ரெட்டியார்.

"ஐயோ! நான் எப்படிப் பொய் சொல்வேன்?" என்றார் நல்லப்பர். "பொய் அன்று; மெய் என்று தானே அப்பொழுது கைக்குறி வைத்தீர்? அப்படியே சொல்லும்," என்றார் நண்பர். "நான் கைக்குறி வைத்ததும் போதும்; உம்முடைய மனத்தைப் புண்படுத்தியதும் போதும்!" என்று வருந்தினர் நல்லப்பர். "என் மனத்தைப் புண்படுத்தி ஆயிற்று; உத்தரவின்படி முறை மன்றத்துக்கு வாரும்; நானும் வருவேன்," என்றார் கொட்டி ரெட்டியார். நல்லப்பர் "அவ்வாறே வருவேன். எப்படியேனும் நீர் அதனை ஒழித்துவிடவேண்டும். நீர் சொல்லுவதன்படியே நடக்கச் சித்தமாக இருக்கிறேன்," என்றார்.

## ௬ கல்விச் சிறப்பை உணர்தல்


கொட்டி ரெட்டியார் நல்லப்பருக்காக ஒரு மனு எழுதினர்; அவர் எழுதப்படிக்கத் தெரியாதவர் என்பதையும், பிறர் அவரை ஏமாற்றிக் கைக்குறி வாங்கிவிட்டதையும் அதில் குறித்தார். அதனை நல்லப்பர் முறைமன்றத் தலைவரிடம் கொடுத்தார்.

"ஐயா, நல்லப்ப ரெட்டியாரே! உமக்கு எல்லாச் செல்வமும் இருந்தும், பயன் இல்லையே! மனு இன்னது என்று தெரியாமல் கண்மூடிக்கொண்டு கைக்குறி வைத்துவிட்டீரே! பார்த்தீரா? எவ்வளவு துன்பத்திற்கு ஆளானீர்! கல்விதான் உண்மையான செல்வம் என்பதை அறிந்தீரா? கண் இருந்தும் வலையில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறீர்; எல்லாம் பட்டால்

தான் தெரியும்," என்று முறைமன்றத் தலைவரும் கூறினார். அப்போதுதான், நல்லப்பர் தம்மிடம் இருந்த பெரிய குறையைத் தெரிந்துகொண்டார்; தம்முடைய வாழ்க்கையில் அடைந்த பல துன்பங்களுக்கும் கல்லாமையே காரணம் என்பதை உணர்ந்தார்.

முறை மன்றத்தில் கொட்டி ரெட்டியாரின் வழக்கு விசாரணை எல்லாம் முடிந்தபின், தலைவர் அவ் வழக்கில் உண்மை இல்லை என்று தள்ளிவிட்டார்.

மறுநாள் நல்லப்பர் கொட்டி ரெட்டியாரிடம் சென்று, சென்னையில் தாம் உற்ற துன்பங்களை எல்லாம் உரைத்து வருந்தினார். "என் மக்களுக்குக் கல்வி அளிப்பதே முதல் கடமை என்பதை இப்போதுதான் உணர்ந்தேன். அக் கடமையைத் தவறாமற் செய்து முடிப்பேன். ஆனால் என் வாழ்நாள் வீணாயிற்றே! நான் கண்ணில்லாத குருடன்போல் வாழ்ந்து சாவவேண்டி ஏற்பட்டதே," என்று கூறி மனம் நொந்தார். கொட்டி ரெட்டியார் அவருக்கு ஊக்கம் அளித்து நாள்தோறும் அரைமணி நேரம் தம்முடன் இருந்தால், சிலநாட்களில் அவரும் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ள முடியும் என்று உறுதி கூறினார். நல்லப்பரும் அவ் வாறே கற்று, எண்ணும் எழுத்துமாகிய கண்களைப் பெற்றுக் களித்தார். அவர் அடுத்த ஆண்டிற்குள் ஒரு பள்ளிக்கூடம்


நல்லப்பர் பள்ளிக்கூடம்

அமைத்து, அதில் பகலில் சிறுவர் நூறு பேர் படிக்கவும், இரவில் முதியோர் அறுபதுபேர் கற்கவும் ஏற்பாடுகள் செய்தார். அது 'நல்லப்பர் பள்ளிக்கூடம்' என்று பெயர்பெற்று, அவர் புகழைப் பரப்பியது.

---

## 2. இளைஞன் உற்ற இடர்

இடம்: ஒரு சிற்றுண்டிக் கடை 'நம்பன் இல்லம்'

[கல்லூரி மாணவர் இருவர் வந்து அமர்ந்தனர்.]

முருகன்:—கோவிந்தா! இதோ இந்த இளைஞனைப் பார். இவன் இயந்திரம்போல வேலை செய்கிறான். சிற்றுண்டி வகைகளின் பெயரை முறையாகச் சொல்வதும், "இரண்டுபேர் நாலணா," என்று கத்துவதும் இவன் வாழ்க்கை ஆகிவிட்டன.

கோவிந்தன் :—முருகா! நானும் இவனைத்தான் கவனித்தேன். இவன் வடிவத்திலும் கட்டழகிலும் குறைந்தவன் அல்லன். என்செய்வது? இவனுடைய அறிவும் ஆற்றலும் இச் செயலுக்கே தகும். உயர்ந்த எண்ணங்கள் எண்ணுவதும் சிறந்த செயல்கள் செய்வதும் இவனால் முடியா. இவன் வாழ்க்கையைக் குறித்து வருந்த வேண்டியதே!

முரு :—நண்பா! வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றியும், இப் பிறவியின் பெருமையைப் பற்றியும் இவன் ஒன்றும் அறியான். அவற்றை அறிய வேண்டும் என்ற கவலையும் இவனுக்கு இல்லை அன்றோ? இவன் வாழ்வின் பயனை எவ்வாறு அடையப்போகிறான்? உண்பதும் உறங்குவது

மாக இருந்து நாட்களைக் கழித்தலே இவன் அடையும் பயன். அந்தோ!

கோவி :—நீ சொல்வது உண்மை, உண்மை. நாம் அவனை அழைப்போம்; அழைத்துப் பேசிப் பார்ப்போம்.

முரு :—தம்பி! இங்கே வா. இந்த 'நம்பன் இல்ல'த்தில் நீ எத்தனை நாளாய் வேலைசெய்து வருகிறாய்?

இளைஞன் :—ஆறு ஆண்டுகளாக இருக்கலாம் என்று எண்ணுகிறேன்.

முரு :—உன் வயது என்ன?

இளை :—எனக்குச் சரியாய்ச் சொல்லத் தெரியாது; எல்லாரும் பதினாறு வயது இருக்கலாமெனச் சொல்லுகிறார்கள்.

முரு :—இங்கு வரும்போது உனக்கு என்ன வயது?

இளை :—நான் வரும்போது (ஒரு சிறுவனைக் காட்டி) இவன் உயரம் இருந்தேன்.

முரு :—உனக்குத் தாய் தகப்பன் இருக்கிறார்களா?

இளை :—(கண்ணீர் விட்டுக்கொண்டே) எனக்குத் தந்தை இல்லை. என் தந்தையார் நான் சிறு பையனாக இருந்தபோதே இறந்துவிட்டார். என் தாயார் வயது சென்றவர்; எங்கள் கிராமத்தில் இருக்கிறார்.

முரு :—உனக்கு உறவினர் ஒருவரும் இல்லையா?

இளை :—ஒருவரும் இல்லை. நாங்கள் மிகவும் ஏழைகள். எங்களுக்கு உறவினர் இல்லை.

முரு :—நீ எது படித்திருக்கிறாய்?

இளை :—ஐயா! சொல்லிக்கொள்ள வெட்கமாகவும் வருத்த மாகவும் இருக்கிறது. எனக்குப் படிப்பே தெரியாது.

முரு :—தம்பி! வருந்தாதே. நீ ஒரு தொழில் செய்து வாழ் கிறாய். படித்துவிட்டு வேலை இல்லாமல் திண்டாடுகிறவர் களைவிட உன் வாழ்க்கை மேலானதே.

இளை :—ஐயா! நான் படும் துன்பம் உங்களுக்குத் தெரி யாது. என் தாயார் வயது சென்றவர்; திக்கற்றவர். அவருடைய கடைசிக் காலத்திலாவது அரை வயிற்றுக் கஞ்சி கிடைக்கவேண்டுமே என்று எண்ணித்தான் இந்தத் தொழில் செய்கிறேன்: காலை முதல் மாலைவரை பாடு படுகிறேன். சென்ற திங்களில் என் தாயாருக்கு மூன்று ரூபாய் மணியார்டர் செய்வதற்கு நான் பட்ட பாடு எனக்குத் தெரியும். ஒருவரை வேண்டி எழுதச் சொன் னேன். அந்த மூன்று ரூபாய் என் தாயாருக்குச் சரியாய்க் கிடைக்கவில்லை. எழுதியவர் என் குறையைத் தெரிந்து கொண்டார்; எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது என் பதை அறிந்துகொண்டு ரூபாய் இரண்டுதான் அனுப்பி யிருக்கிறார். அந்த இரண்டு ரூபாயும் என் தாயார் கையில் போய்ச் சேரவில்லை. அவரும் எழுதப் படிக்கத் தெரியாத வர். அந்த மணியார்டர் கொண்டு வந்தவருக்கு இரண் டணா, சாட்சி போட்டவருக்கு இரண்டணா போக, ஒரு ரூபாய் பன்னிரண்டணா அவருக்குக் கிடைத்ததாம். இப்படிப் பணம் போவதோடு, நான் படும் தொல்லைகளுக் கும் எல்லை இல்லை. என்றைக்காவது சினிமாவுக்குப் போனால், கதையின் காலும் தெரிவதில்லை; தலையும் தெரிவ தில்லை. யாராவது கற்றறிந்த பெரியோர் வந்து பேசுகிறார் என்று தெரிந்து அவருடைய பேச்சைக் கேட்கப்போய் உட்கார்ந்தால், எனக்கு ஒன்றும் விளங்குவதில்லை; தூக்கந் தான் வந்து விடுகிறது. என் தாயாருக்குக் கடிதம் எழுதி

அவருடைய நலத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், அது மலையை முறிக்கும் வேலை. நாள்தோறும் ஜெர்மன் சண்டையைப்பற்றிப் பேப்பர்களில் என்ன என்னவோ படிக்கிறார்கள்! அவர்கள் முன்னே நான் குருடன்போல நிற்கவேண்டியிருக்கிறது. உலகத்தில் என்ன என்ன நடக்கின்றன என்று தெரிந்துகொள்ள எனக்கு ஆசை உண்டு. ஆனாலும், நான் என்ன செய்வேன்? இவைகளைப்பற்றிப் படித்தவர்களைக் கேட்டால், ஒரு வேளையில் சொல்லுகிறார்கள்; மற்றொரு வேளையில் இகழ்ச்சியாகப் பேசுகிறார்கள்; சிலர் என்ன வேண்டினாலும் வாய் திறவாமல் படித்துக்கொண்டே இருக்கிறார்கள். இன்னும் நான் படும் துன்பங்களைச் சொல்லிக்கொண்டே இருந்தால் பொழுதே போகும்; முதலாளி கோபித்துக்கொள்வார். மன்னித்துக்கொள்ளுங்கள். எனக்கு வேலை இருக்கிறது.

கோவி:—நண்பா! இந்த இளைஞன் அவன் தாயாரைப் பற்றிக் கூறியதை எண்ணிப்பார். என் மனம் உருகி விட்டது. ஆ!

முருகன்:—எழுத்தறிவு இல்லாத காரணத்தால் இவனைப் போல வருந்துகிறவர் பல பேர். நம் நாடு மிகக் கீழான நிலையில் இருக்கிறது. நூற்றுக்குப் பத்துப்பேர் படித்திருக்கிறார்கள் என்றால், இந்த நாட்டில் கல்வியே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இராப்பள்ளிக் கூடங்கள் வைத்து நடத்தி இப்படிப்பட்டவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும். நம்மைப்போன்றவர்கள் இந்தத் துறையில் உழைக்க முன்வர வேண்டும். அரசியலாரும் எல்லா வகையிலும் தக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட நல்லகாலம் விரைவில் வரவேண்டும்.

---


# 3. வண்டிக்காரன் துன்பம்

(நண்பன்)

இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள், நானும் தங்கவேல், நாவுக்கரசு என்ற என் நண்பர் இருவரும் சேர்ந்து அடையாறு செல்ல வேண்டும் என்று புறப்பட்டோம். தங்கவேல் ஒருவகையானவன்; வாழ்க்கையில் எப்போதும் மாறுதல் வேண்டும் என்று வற்புறுத்துவான். ஒரு திங்களில் உள்ள நாட்கள் முப்பது என்றால், அவன் அந்தத் திங்களில் உள்ள நாள் தோறும் ஒருவகையாக முப்பது வகையான சிற்றுண்டி கிடைத்தால் மகிழ்வான்; உடைகளிலும் அவ்வாறே பலவகை நாடுவான்; நூல்களிலும் பலவகை தேடுவான். இன்று கண்டதையே நாளையும் கண்டால் வெறுப்பான். ஆதலால் நானும் நாவுக்கரசும் மோட்டாரில் ஏறிச் செல்ல வேண்டும் என்று விரும்பியும், தங்கவேல் இசையவில்லை. "நாள்தோறும் மோட்டாரில் ஏறிப் பல இடங்களுக்குப்போய் வருகிறீர்களே; உங்களுக்குச் சலிப்பு இல்லையா? இன்று குதிரை வண்டியில் ஏறிச் செல்லலாம். என்றைக்காவது குதிரை வண்டியிற்போவது தனி இன்பமாயிற்றே!" என்றான். நாங்கள் என்ன சொன்னாலும் அவன் கேட்கமாட்டான் என்பதை அறிந்து, குதிரை வண்டிக்காரன் ஒருவனிடம் பேசி ஏற்பாடு செய்துகொண்டோம்.

வண்டியும் புறப்பட்டது; எங்கள் பேச்சும் மிகுந்தது. நாவுக்கரசு பெரிய வாயாடி. அவனுக்கு அந்தப் பெயர் வைத்தவர் யாரோ? அவருக்குப் பட்டம் கட்ட வேண்டும். தனியுடைமை பொதுவுடைமைப் பேச்சு முதல், இப்போது நடைபெறும் ஐரோப்பியப் போர்ச் செய்தி வரைக்கும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்தன.

நாங்கள் சென்றுகொண்டிருந்த பாதையின் பக்கத்தில் அதனைப் போலவே மற்றொரு பாதை அத் திசை நோக்கியே சென்றது. பாதை முனையில், 'இது பொது வழி அன்று (No




மைசூர் மகாராஜா மாளிகை

thorough fare)' என்று எழுதின பலகையுடைய கம்பம் ஒன்று இருந்தது. நாங்கள் அதைக் கவனிக்கவில்லை. எங்கள் பேச்சிலேயே இருந்துவிட்டோம். வண்டிக்காரன் அதைப் பார்த்தான்; ஆனால் அடையாற்று வழியைத் தெரிவிக்கும் கைகாட்டி மரம் என்று நினைத்துக் கொண்டான். நேரே வண்டியை ஓட்டிவிட்டான். வண்டி சிறிது தொலை சென்றபின் பெரிய மாளிகை ஒன்று தென்பட்டது. சுற்றித் தோட்டமாய் இருந்ததே தவிர வேறு வீடுங் காணோம்; வாசலும் காணோம், திடீரென்று சேவகன் ஒருவன் ஓடி வந்தான்; ஓடி வந்து, "வண்டியை எங்கே ஓட்டுகிறாய்?" என்று வண்டிக்காரனைக்

கேட்டான். "அடையாற்றுக்கு" என்றான் வண்டிக்காரன். எங்கள் பேச்சுக் கெட்டது. அப்போது தக்காளிப்பழம் பச்சையாக உண்பது நல்லதா; சிறிது வேகவைத்து உண்பது நல்லதா என்பதை நாங்கள் சுவையோடு பேசிக்கொண்டிருந் தோம்; எங்கள் பேச்சை இடையில் நிறுத்திவிட்டோம்.

"வண்டி ஓட்டத் தெரியாதவர்களுக்கு இந்த வேலை ஏனடா? இது மைசூர் மகாராஜா மாளிகை. வழியில் பலகை இருந்தும் கண்ணை மூடிக்கொண்டு வருகிறாயே! திருப்பு வண்டியை," என்றான் அந்தச் சேவகன். வண்டிக்காரன் ஒன்றும் மறுமொழி கூறாமல் வண்டியைத் திருப்பினான். திரும்பி வரும்போது நாங்கள் பலகையைப் பார்த்தோம்; அதைப் படிக்காமல் சென்றுவிட்டோமே என்று வருந்தினோம்.

மற்றொரு பாதையில் வண்டி சென்றது. "அப்பா! வண்டிக்காரா! நீயும் அந்தப் பலகையைப் பார்க்காமல் இப்படிச் செய்தாயே!" என்று நாவுக்கரசு அவனைக் கேட்டான்.

"ஐயா! இப்படி என்று தெரிந்திருந்தால் நான் வண்டியை ஓட்டி யிருப்பேனா? பலகையை நான் பார்த்தேன். அது கைகாட்டி மரம் என்று எண்ணிக்கொண்டேன். எனக்குப் படிக்கத் தெரியாது; கையெழுத்துப் போடவும் தெரியாது," என்று வண்டிக்காரன் வருத்தத்தோடு சொன்னான்.

பலகையில் உள்ள எழுத்துக்களைக் கூட்டிப் படிக்கவும் தெரியாமல் வண்டி ஓட்டி வாழ்வது பெரிய துன்பம் என்பதை அவன் அறிந்தே வருந்தினான். அவன் வருத்தத்தை நான் குறிப்பாக அறிந்துகொண்டேன். "நீ எத்தனை ஆண்டுகளாக வண்டி ஓட்டிவருகிறாய்? பலகைகளைப் படித்து அறியா விட்டால், இடையூறுகள் பல உண்டாகுமே!" என்றேன்.

வண்டிக்காரன் பெரிய கதை கூறத் தொடங்குகிறவர் போலப் பேசத் தொடங்கினான். என் வாழ்க்கையைக் கேட்க விரும்புகிறீர்களா? நான் பட்டபாடு யார் படுவார்? என்னுடைய ஊர் ஆர்க்காட்டை அடுத்த வேலம் என்னும் கிராமம். என்னுடைய திருமணத்துக்காக ஏற்பட்ட கடனைத் தீர்க்க முடியாமல், கடன் கொடுத்த செட்டியாருக்கு என் நிலத்தை விட்டுவிட்டேன். பிழைப்பதற்கு ஒருவழியும் தெரியாமல் போயிற்று. பக்கத்து ஊர் முதலியார் ஒருவர் சென்னையில் வாணிகம் செய்கிறார். அவர் எனக்கு இந்த வழி காட்டினார்; குதிரை வண்டி வாங்கிக் கொடுத்து வண்டி ஓட்டிப் பிழைக்க வைத்தார். வண்டி ஓட்டத்தொடங்கின மூன்றாம் நாள் முதலியார் வீட்டார் வெளி ஊருக்குப் போய்த் திரும்பவும் சென்னைக்கு வந்தனர். அவர்களை அழைத்து வருவதற்காகப் புகைவண்டி நிலையத்துக்குப் போயிருந்தேன். அவர்களை வண்டியில் ஏற்றிக்கொண்டு நிலையத்திலிருந்து வெளியே வரும் போது 'உள்ளே போகும் வழி' (Way In) யில் வண்டி ஓட்டினேன். அவ்வழி என்ன வழி என்று தெரியாமல் அவ்வாறு செய்தேன். அங்கிருந்த போலீஸ்காரன், 'ஏ! ஏ! நில், நில். வெளியே போகும் வழி அது. இப்படி வந்தது தப்பு. கொண்டுவா வண்டியைப் போலீஸ் நிலையத்துக்கு,' என்றான். வண்டியிலிருந்த ஒருவர் இறங்கி, போலீஸ்காரனிடம் ஏதோ சொல்லிவிட்டு வண்டியில் ஏறி, வேறு வழியாக வண்டியை ஓட்டும்படி சொன்னார். போலீஸ்காரன் சொல்லைக் கேட்டு நடுங்கிக் கொண்டிருந்த நான், 'தப்பிப் பிழைத்தது தம்பிரான் புண்ணியம்' என்று எண்ணிக்கொண்டு வண்டியை ஓட்டிச் சென்றேன்.

"ஒருநாள் இராயபுரத்துக்கு வாடகைக்காக வண்டி ஓட்டினேன்; ஒரு தெரு வழியாகக் போய்க்கொண்டிருந்த

போது, அங்கே ஒரு போலீஸ்காரன் வந்து 'நிறுத்து, நிறுத்து,' என்றான். பழைய நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்தது; மிகவும் அஞ்சினேன். 'இது வருகிற வண்டிகளுக்கு மட்டும் உரிய தெரு (One Way Traffic); போகிற வண்டிகள் இப்படிப் போகக் கூடாது; வேறு பேச்சு வேண்டாம்,' என்று சொல்லிவிட்டுக் குதிரையைத் தூண்டி, என்னையும் விரைந்து ஓட்டச் செய்து எங்கோ அழைத்து செல்லத் தொடங்கினான். வண்டியில் இருந்தவர்கள் என்னைக் கடிந்து பேசினார்கள்; போலீஸ்காரன் எண்ணம் அறிந்துகொண்டு கீழே இறங்கி, 'இப்படிப்பட்ட வண்டிக்காரன் என்று தெரியாமல் ஏறிவிட்டோமே!' என்று வெறுத்துப் பேசினார்கள்; ஓரணாவும் கொடுக்காமல் வேறு வண்டியைத் தேடிக்கொண்டு போய்விட்டார்கள்.

"போலீஸ்காரனிடம் மன்னிப்பு கேட்கத் தொடங்கினேன்; அவனோ சினங்கொண்டான். வேறு வழி இல்லை. ஆவது ஆகுக என்று வருத்தத்தோடு சென்றேன். போலீஸ் நிலையம் சென்று சிறிது நேரம் காத்திருந்தேன். மூன்று ரூபாய் அபராதம் செலுத்திவிட்டுப் போகவேண்டும் என்று வேறொரு போலீஸ்காரன் வந்து சொன்னான். அப்போது என் கையில் ஒன்றும் இல்லை; வாடகையையே நம்பியிருந்தேன்; வாடகை போயிற்று; அபராதம் ஆயிற்று. இரவு 8 மணிக்குள் எங்கிருந்தாவது பெற்று வந்து தொகையினைச் செலுத்தவேண்டும் என்றான் போலீஸ்காரன்.

"அவ்வாறே செலுத்துவதாகக் கூறி நான் புறப்பட்டேன். குதிரைக்குத் தீனி இல்லை. வாயில்லாத உயிரின் வருத்தத்தை எண்ணிக்கொண்டே, அந்த முதலியாரிடம் சென்றேன்; அவரிடம், எல்லாம் விரிவாகச் சொல்லிப் பணம் கேட்டேன். 'வண்டி ஓட்டவும் வகையில்லையே!' என்று சொல்லிக் கொண்டே அவர் பணம் கொடுத்தார். உடனே நான் விரைந்து

சென்று, அபராதம் செலுத்திவிட்டு, குதிரையையும் வண்டியையும் மீட்டுக்கொண்டேன். அன்று நான் அடைந்த வருத்தத்துக்கு அளவே இல்லை.

"ஆனால், ஒருவர்—அவரும் வண்டி ஓட்டுகிறவரே—எனக்கு முதலிலேயே ஒன்றை வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். 'எப்போதும் இடப்புறமே ஓட்டு (Keep to the left); வலப்புறம் ஓட்டினால் வந்தது ஆபத்து; தெரியா




விட்டால் போலீஸ்காரரையாவது கேட்டுத் தெரிந்துகொண்டு, பிறகு ஓட்டு. தெரியாமல் ஓட்டிக்கொண்டு போவதைவிட, வண்டியை ஓர் ஓரத்தில் நிறுத்திவிடுவது நல்லது,'' என்று அவர் சொல்லியிருக்கிறார். அப்படிச் சொல்லியிருந்தும் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. எல்லாம் எழுத்தறிவு இல்லாத

குறையே. என் காலத்தை இனியும் இப்படியே கழிக்க முடியாது. அடிக்கடி மானக்குறைவும் பண இழப்பும் ஏற்படுகின்றன. இனிமேல் எப்படியாவது எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்றுக் கொள்ளப்போகிறேன். என் கதை இருக்கட்டும். நான் துன்பப் படுவது தவிர, வண்டியில் ஏறுகிறவர்களுக்கும் துன்பம் தருகி றேன். இதோ அடையாறு வந்துவிட்டது."


எங்கள் வெறும் பேச்சைவிட வண்டிக்காரனுடைய அநுபவப் பேச்சைக் கேட்பதையே நாங்கள் விரும்பினோம். கல்வி யில்லாமைக்காக அவன் வருந்தியதை அறிந்து, நாங்கள் சில அன்புரைகள் கூறினோம்; அங்கிருந்த புத்தகக் கடையில், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ள "தானே தமிழ் கற்கும் முறை" என்ற நூல் ஒன்றை வாங்கிக் கொடுத் தோம்; நாள்தோறும் ஒய்வு கிடைத்தபோது மூன்று நான்கு சொற்கள் பழகி வருமாறு சொல்லி ஊக்கம் அளித்தோம். அன்று விடைபெற்றுச் சென்ற வண்டிக்காரன் இதோ இந்தக் கடிதம் எழுதினவன். இதனால், "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்," என்னும் பழமொழி எவ்வளவு உண்மை என்று தெரிகிறது அன்றோ?

# 4. கைத்தொழிலும் கல்வியறிவும்

மேனுடு கைத்தொழிலில் மிக மிக முன்னேறி யிருக்கிறது. புதிய முறைகளைக் கண்டுபிடித்துத் தங்கள் நாட்டை முன்னேறச் செய்தவர்கள் மேனுட்டார்களே. அவ்வாறு செய்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஏழைக் குடும்பங்களில் பிறந்தவர்களே.



மார்க்கோனி



ஸ்டீபென்சன்

ரேடியோவைக் கண்டுபிடித்த மார்க்கோனி; கிராமபோன், மின்வண்டி, மின்விளக்கு முதலானவற்றைக் கண்டுபிடித்த எடிசன்; செடி கொடிகளில் பல புதிய வகைகளைப்படைத்த பர்பாங்க்; புகைவண்டியைக் கண்டு பிடித்த ஜார்ஜ் ஸ்டீபென்சன்; ரேடியம்


(கதிரி) கண்டு பிடித்த கியூரி அம்மையார் முதலான மேல்நாட்டு நிபுணர்கள் ஏழைக் குடும்பங்களில் பிறந்தவர்கள். ஆனால், அவர்கள் கல்வியறிவு பெற்றிருந்தார்கள்; அதனாலேதான், தாங்கள் கண்டுபிடித்த முறைகளைச் செல்வர்களுக்கும் கற்றவர்களுக்கும் அரசியலார்க்கும் விளக்கிக் காட்டி மெய்ப்படுத்தினார்கள்; தக்க உதவிகளும் பெற்று முன்னேறினார்கள்.

நம் நாட்டில் கைத்தொழில் ஏன் அவ்வாறு முன்னேற்றம் பெறவில்லை? நம் நாட்டவர்கள் மேனாட்டாரைவிட அறிவில் குறைந்தவர்களா? இல்லை. தகுந்த உதவிகள் இருந்தால் எந்நாட்டவரையும் இவர்கள் திறமையால் வெல்லமுடியும். ருக்மணிகுக்கர் என்னும் சமைக்கும் கருவியைக் கண்டு உதவிய அ. சோமசுந்தரஞ் செட்டியார், எம். ஏ., அமிருதாஞ்சனம் செய்துதவிய நாகேஸ்வரராவ் பந்துலு, சஞ்சீவி என்னும் மருந்துவகைகளைத் தேர்ந்தெடுத்து உதவிய ஆப்ரஹாம் பண்டிதர்; குருமருந்துகள் செய்து பரப்பிப் புகழ்பெற்ற டாக்டர் மதுரம்; அசோகா பாக்குத்தூள் செய்து விற்றுப் பெருஞ்செல்வம் படைத்த கிருஷ்ண செட்டி இவர்களைப்பற்றி அறியாத தமிழ் மக்கள் இரார். இவர்களைப்போன்ற சிறந்த அறிஞர்கள் ஆயிரக்கணக்காக நம் நாட்டில் தோன்ற இடம் உண்டு. ஆனால், மக்களிடையே உள்ள கல்லாமை அதற்குப் பெருந் தடையாக உள்ளது. கைத்தொழிலாளர்களில் அறிவிற் சிறந்தவர் பலர் இருக்கின்றனர்; ஆனால், கல்வியறிவு இல்லாமையால், குடத்திற்குள் விளக்குப்போல் அவர்களுடைய அறிவு மாய்ந்து வருகின்றது. மேனாட்டவரைப்போல், புதிய முறைகளைப் பிறர்க்கு விளக்கிக் காட்டும் ஆற்றல் அவர்களுக்கு இல்லை. அரசியலாரிடம் உதவி பெற முயலும் வழியும் அவர்களுக்குத் தெரிவதில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு, கோவையில் நெசவாளி ஒருவன் தானே சித்திரம் நெய்யக் கூடிய புதுமுறைத் தறியைக்



பத்திரிகை விற்கும்
பதினுன்கு வயதுள்ள
எடிசன்



சுரங்க விளக்கு, மின்விளக்கு, மின்வண்டி
முதலிய பொறிகளியற்றிய எடிசனர்



செடி கொடிகளில் புதிய பல இனங்களைப் படைத்த
பர்பாங்க்



வேலை தேடித் திரியும்
பர்பாங்க்


கண்டுபிடித்தான். ஆனால், படிப்பு இல்லாத குறையினால் அவன் அறிவு அதனுடன் நின்றுவிட்டது. ஆந்திர நாட்டு நெசவாளி ஒருவன் தையல் இல்லாமல் தறியினாலேயே முழு உடைகளையும் செய்யும்வழி அறிந்திருந்தான். கல்வியின்மையால் அவனுடைய ஆற்றலும் அவனோடு மறைந்துவிட்டது. நம் நாட்டு மருத்துவர்



ரேடியம் கண்ட கியூரி அம்மையார்

பலர் அருமையான மருந்து வகைகளைக் கண்டுபிடித்துப் பயன் படுத்தியுள்ளனர். ஆனால், அவற்றின் முறைகளைப் பிறர்க்கு விளக்காமையால், அவை அவர்களுடன் மறைந்தொழிந்தன. கல்வியறிவு பெற்றிருந்தால், அவர்கள் அறிவும் ஆற்றலும் நாட்டுக்கு எவ்வளவு பயன்பட்டிருக்கும்!

தொழிலாளர் கல்வி கற்பதால் பெரும் பயன் அடைய முடியும்; ஒரே தொழிலில் தேங்கி நின்று சோர்வு அடையாமல் மேனமேலுயர்ந்த வேலைகள் பெறமுடியும்; கல்வியறிவின் சிறப்பால், பேராசிரியர்களாகத் திகழவும் கூடும். அவ்வாறு உயர்வதால் அவர்கள் நாட்டின் முன்னேற்றத்துக்குக் காரணமாக விளங்குவார்கள்.



ருக்மணி குக்கர்



அ. சோமசுந்தரஞ் செட்டியார், எம். எ.

சார்லஸ் டிக்கன்ஸ் என்பவர் இளமையில் பெட்டிகளின் மேல் குறிப்புத்தாள் (லேபல்) ஒட்டும் தொழிலாளியாக இருந்து, இடைவிடா ஊக்கத்தின் பயனாகப் பெருஞ் சிறப்புப் பெற்ற புதுக்கதை (நாவல்) ஆசிரியராக விளங்கியது உலகறிந்த உண்மை அன்றோ?



கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள் செய்துதவிய 'கர்ணாமிர்தசாகர'
ஆசிரியர் தஞ்சை ஆப்ரஹாம் பண்டிதர்

அடிமைத் தொழில் செய்து வந்த புக்கர் வாஷிங்டன் என்னும் சிறுவன் இளமையில் பள்ளியுள் நுழையும் வாய்ப்பும் பெருமல் வாழ்ந்து, ஒருநாள் அதனுள் எட்டிப் பார்த்தான்;




அமிர்தாஞ்சனம்




நாகேஸ்வரராவ் பந்தலு

பின்னர் விடாமுயற்சியின் பயனுகக் கல்வியில் தேர்ந்து பட்டமும் சிறப்பும் பெற்ருன்; தன் போன்ருர்க்குப் பேருதவி செய்து வாழ்வும் பேறும் பெற்ருன்.

கல்விகற்ற தொழிலாளர்கள் எதைச் செய்தாலும் திருந்தச் செய்வார்கள்; மற்றவர்களிடம் கையேந்தி நிற்கமாட்டார்கள்; கடமையைச் செய்வதில் மகிழ்ச்சி அடைவார்கள்; மேன்மேலும் வருவாய் மிகுமாறு வழிதேடுவார்கள்; வருவாய்க்கு ஏற்ற செலவு செய்வார்கள்; கடன் படாமல் வாழ்ந்து கவலையை



சார்லஸ் டிக்கன்ஸ் லேபல் ஒட்டுதல்



சார்லஸ் டிக்கன்ஸ் நாவல் எழுதுதல்

ஒழிப்பார்கள்; எதிர்காலத்திற்காக எய்ப்பில் வைப்பாகச் சிறிது சிறிதாகச் செல்வம் சேர்ப்பார்கள். மேனாட்டுத் தொழிலாளர்களிடம் இந்த அருங்குணங்களைக் காணலாம். நம் நாட்டுத் தொழிலாளர்களோ வறுமைக்கே இருப்பிடமாய், துன்பமே வடிவாய் வாழ்கிறார்கள்; சில ஆண்டுகள் உழைத்த பின், தொழிலில் ஊக்கங்குன்றி, உடல் உரமும் தளர்ந்து, கவலைக்கு அடிமையாய் நோய்வாய்ப்பட்டு மறைகிறார்கள். காரணம் என்ன? கல்வியறிவு இல்லாமையே ஆகும்.

நம் நாட்டில் கைத்தொழில்களை வெறுத்து, அரசியல் வேலைகளை விரும்பும் மனப்பான்மை மக்களிடையே மிகுதியும் உள்ளது. தவிர, கைத்தொழில்களில், அத்தொழில் உயர்ந்தது; இத்தொழில் தாழ்ந்தது என்ற வேறுபாடு பாராட்டப்படுகிறது; இந்த வேறுபாட்டால், மக்களுக்குள் உயர்வு தாழ்வு ஏற்பட்டு, ஒற்றுமை குலைந்திருக்கிறது. இவை எல்லாவற்றுக்குங் காரணம் கல்வியறிவு இல்லாமையே ஆகும். மேனாட்டிலோ, கைத்தொழில்களை ஒருவரும் வெறுப்பதில்லை; அரசியல் தொழில்களைவிடக் கைத்தொழில்களையே பலரும் விரும்புகின்றனர். தவிர, அங்கே கைத்தொழில்களுக்குள் உயர்வு தாழ்வு இல்லை; அதனால் மக்களிடையே வேற்றுமை ஒழிந்து, "எல்லாரும் ஒரு நிறை; எல்லோரும் ஒருவிலை; எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்ற நல்லெண்ணமும் ஒற்றுமையும் நிலவுகின்றன. அவர்கள் நூற்றுக்கு நூறு பேரும் படித்தவர்களாக இருப்பதால், அவ்வாறு வாழ முடிகிறது. மேனாட்டிலுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் படிக்கத் தெரியும். அவனும் தனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் தொழிலாளர் சங்கங்களுக்குப் போவான்; அங்கே பல செய்திகளையும் அடிக்கடி அறிந்துகொள்வான்; தனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் நாளிதழ் (தினசரிப்பத்திரிகை) ஒன்று வாங்கிப் படிப்பான்; ஊர்ச் செய்திகளையும்



பட்டம் பெற்ற புக்கர் வாஷிங்டன்




பள்ளியைப் பார்த்த புக்கர் வாஷிங்டன்


உலகச் செய்திகளையும் அறிவான்; உய்யானம் (பார்க்), ஒலி பரப்பி (ரேடியோ) முதலியவற்ருல், தக்க வழியில் பயன் பெறு வான். இவ்வாறே தொழிலாளர்கள் எல்லாரும் வகை அறிந்து வாழ்வார்கள். நம் நாட்டு ஏழைத் தொழிலாளர்கள் ஒன்றும் அறியாமல் கண்மூடி வாழ்வு வாழ்ந்து, கிடைக்கும் பணத்தையும் ஒய்வையும் குடியிலும் சோம்பலிலும் போக்கி, மனைவி மக்களை அல்லற்படுத்தி அலையவைத்து வருந்திச் சாகின்ருர்கள். அவர் களும் தொழிலாளர்களே; இவர்களும் தொழிலாளர்களே. அவர்களைவிட இவர்கள் மிகுதியாக உழைத்தலும் உண்டு. ஆனாலும், அவர்கள் வாழ்வை அடைய, இவர்கள் தாழ்வை அடைதல் ஏன்? அவர்களுக்குக் கல்விக் கண் உண்டு; இவர் களுக்கு அக்கண் இல்லை. இதுவே காரணம்.

ஆதலால், நம் நாட்டு மக்கள் கைத்தொழிலில் முன்னேற் றம் அடைந்து நல்வாழ்வு வாழவேண்டுமானல், அனைவரும் எழுத்தறிவு பெறுதலையே முதற் கடமையாகக் கொள்ளவேண்டும்.

---



படித்த ரிக்ஷா இழுப்பவன் பத்திரிகை படித்தல்



படியாத ரிக்ஷா இழுப்பவன் சோம்பி உறங்குதல்

# 5. படம் பார்த்த பாட்டியார்

(பேரன்)

சென்ற ஆடிமாதத்தில் ஒருவார காலம் எங்கள் ஊரில் உள்ள படக்காட்சி (சினிமா) நிலையத்தில், 'சொல்லாத சொல்' என்னும் படம் காண்பிக்கப்பட்டு வந்தது. அந்தப் படத்தைப் பற்றிப் பலரும் புகழ்ந்து பேசிவந்தனர். ஆகையால், அந்தப் படக்காட்சி துவங்கின முதல்நாள் இரவே சென்று அதைக் காண விரும்பினேன். என் பாட்டியாரும் என்னை உடன் வருமாறு அழைத்தார். என் உயர்பள்ளியில் மறுநாள் தமிழ்த் தேர்வு நடத்தப் போவதாக ஆசிரியர் அறிவித்திருந்தார். ஆகையால், அன்று இரவு பாட்டியாருடன் சினிமாவுக்குச் சென்றால், என் படிப்புக் கெடும் என எண்ணினேன்; எண்ணி, உடன் வரமுடியாதெனக் கூறிவிட்டேன். பக்கத்து வீட்டார் சிலர் அன்றைய காட்சிக்குப் போவதை அறிந்து, பாட்டியார் அவர்களுடன் புறப்பட்டுச் சென்றார்.

மறுநாள் காலையில் பாட்டியாருடன் பேசுவதற்குப் போதிய நேரம் இல்லை; ஆகையால் பள்ளிக்குச் சென்று விட்டேன். திரும்பி வந்தபோது, 'சொல்லாத சொல்' என்ற படத்தைப் பற்றிப் பாட்டியார் கொண்ட கருத்தை அறியவேண்டும் என்னும் அவாவுடன் விரைந்து வந்து வீடு சேர்ந்தேன்.

"பாட்டி! நீங்கள் நேற்றிரவு பார்த்த படம் எப்படி இருந்தது? கதையைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். நன்றாக இருப்பதாகத் தெரிந்தால் இன்றிரவு நானும் சென்று காண்பேன்," என்றேன்.

"நீ நேற்றே என்னுடன் வந்திருந்தால் நன்றாக இருந் திருக்கும். கண்ணப்பா! அது நல்ல படம். கட்டாயம்




'சொல்லாத சொல்' படக்காட்சி

ஒவ்வொருவரும் சென்று அதைப் பார்க்கவேண்டும். என்ன அருமையான படம்! எவ்வளவு உயரமான குதிரைகள்! அந்தக் குதிரைகளின் மேலே இருந்தவர்கள் அரசர்களோ யாரோ தெரியவில்லை, எல்லாரும் ஒருவரைப் போலவே இருந் தார்கள், இவ்வளவு மட்டுமா? ஒரு பெரிய கோவில் கோபுரம் காண்பித்தார்கள். அது திருவண்ணாமலைக் கோவிலோ, அல் லது வேறு எந்தக் கோவிலோ எனக்கு ஒன்றும் தெரியவில்லை. அந்தப் படத்தில் ஏதோ எழுதி யிருந்தார்கள். அதைப் படித்

தால் எந்தக் கோவில் என்பது தெரிந்துகொள்ளலாமென்று எண்ணினேன். ஆனால், அவர்கள் என்ன நினைத்துக்கொள்வார்களோ என அஞ்சினேன்; கேட்காமல் இருந்து விட்டேன். அந்தக் கோவிலில் திருவிழா ஒன்று நடந்தது. அப்போது பெரிய கூட்டம் கூடியிருந்தது. எள் போட்டால் எள் விழாது; அவ்வளவு பெரிய கூட்டம் அது. இன்னும், ஒரு தெருவில் மணமான பெண்களும் கன்னிப் பெண்களும் ஒழுங்காக நடந்து போவதைப் பார்த்தேன்; எங்காவது திருமணத்துக்குப் போனார்களோ என்னவோ தெரியாது. அவர்கள் நல்ல நல்ல நகைகள் அணிந்திருந்தார்கள்; விலையுயர்ந்த பட்டுப் புடவைகள் உடுத்தியிருந்தார்கள். அந்த விளக்கு வெளிச்சத்தில் அவர்களைக் கண்கொண்டு பார்க்க வேண்டுமே! அவர்களில் ஒருத்தி உன் சித்தியைப் போலவே இருந்தாள். ஆனால், நன்றாகப் பார்ப்பதற்குள் அந்தப் படம் மறைந்துவிட்டது," என்று அவர் வழ வழ என்று பேசிக்கொண்டே போனார்.

அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்க எனக்குப் பொறுமை இல்லை.

"போதும், போதும், பாட்டி! நான் கேட்டது என்ன? நீங்கள் சொல்வது என்ன? குழந்தைகளுக்கு ஏதேதோ சொல்லி ஏமாற்றுவதுபோல, என்னையும் ஏமாற்றப் பார்க்கிறீர்கள். 'சொல்லாத சொல்' என்று கதைக்குப் பெயர் கொடுத்தது ஏன்? சொல்லாத சொல் என்ன? அந்தச் சொல் சொன்னவர் யார்? ஏன் சொன்னார்? கதையைச் சுருக்கமாகச் சொன்னால் நானே தெரிந்து கொள்வேன்," என்று கதையைச் சொல்லுமாறு வேண்டினேன்.

"எனக்கு முன்னமே தெரியுமே! நீ இப்படிக் கேட்பாய் என்று நேற்றே எண்ணினேன். அதனால் உன்னையும் உடன் வருமாறு அழைத்தேன். என்ன கதையோ அது? எனக்கு

ஒன்றும் தெரியவில்லை. யார் யாரோ என்ன என்னவோ பேசினார்கள். எனக்கு ஒன்றும் நினைவில் இல்லை. சொல்லாத சொல், பேசாத பேச்சு இவை யெல்லாம் என்னைக் கேட்க வேண்டாம். ஆனால் ஒன்று நினைவில் இருக்கிறது. ஒரு படத்தில் கணவனும் மனைவியும் வந்து ஒருவரை ஒருவர் திட்டினார்கள். அவள் கையை ஆட்டி ஆட்டிப் பேசினாள். அவன் மீசையை முறுக்கி முறுக்கி நடந்தான். இறுதியில் அவள் அவன்மேல் கழுநீர்ப் பானையைப் போட்டு உடைத்தாள். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பதை நான் அறியேன். மற்றவர்கள் பேசிய பேச்சுக்கள் இவ்வளவு நன்றாக இல்லை. அவர்கள் இலக்கணமாகப் பேசினார்கள். எனக்குத் தூக்கம் வந்துகொண்டே இருந்தது. தூங்கித் தூங்கிப் பார்த்துக் கொண்டிருந்தபோது, 'சினிமா முடிந்துவிட்டது அம்மா! எழுந்திருங்கள், போகலாம்,' என்று சொல்லிப் பக்கத்து வீட்டார் என்னை அழைத்தனர். வரும்போது வழியெல்லாம் தெருவெல்லாம் மக்கள் கூட்டமே. நேற்று ஆடிக் கிருத்திகைக்காகத் திருத்தணிகை போய் வந்தவர்களைப்போல் பெருங் கூட்டம் வந்தது," என்று பாட்டியார் சொல்லிக்கொண்டு என் பொறுமையை அளந்து பார்த்தார்.

இடையே எழுந்து போய்விடலாமே என்றுகூட எண்ணினேன். ஆனால், அப்படிச் செய்தால், அவருக்கு மன வருத்தமாக இருக்குமே என்று நினைத்துப் பொறுமையோடிருந்தேன்.

"கண்ணப்பா! நான் என்ன சொன்னாலும் உனக்குப் பிடிக்காது. இன்றிரவு நீயே சென்று பார்த்துவிட்டு வா. நான் சொன்னது பொய்யா மெய்யா என்று தெரிந்துகொள்," என்று அவர் கூறினார்.

அன்றிரவு, நான் அதைக் காணச் சென்றேன். கட் புலனுக்கும் செவிப் புலனுக்கும் பகுத்தறிவுக்கும் நல்ல வேலை

அளித்தது அப்படம். அது சினிமாத் துறையில் ஆராய்ச்சி வல்லவர்களால் ஆக்கப்பெற்றிருக்க வேண்டுமே என்று நம்பினேன்.

பாட்டியார் சொன்னவற்றை நினைத்துக்கொண்டேன். அந்தோ, என்ன அறியாமை! அருமையான நடிப்புக்களையும், உரையாடல்களையும், நாடகத் துவக்க முடிவுகளையும், அறிவுத் துறைகளையும் அவர் அறிய முடியாமல் போயிற்றே! குதிரை களையும், கோவில் கோபுரத்தையும், பொன் நகைகளையும், பட்டுப் புடவைகளையும், என் சிற்றன்னை போன்ற ஒருத்தி யையும் காண்பதற்கோ அவர் சினிமா சென்றார்? அருமையான கலை நுட்பங்களை யெல்லாம் விட்டு, இடையே செருகப்பட்ட குறும்புப் பகுதியை-கழுநீர்ப் பானை உடைத்த பகுதியை—மற வாமல் போற்றுகின்றாரே! அதற்கும் நாடகத்திற்கும் தொடர்பு இல்லையே!

---

பாட்டியார்க்கு வயது ஐம்பத்தொன்று. என் வயதோ பதினைந்து. என்னைவிட அனுபவம் மிக்கவராக இருந்தும், ஒரு நாடகத்தைக் கண்டும் கேட்டும் அறிந்துகொள்ள முடிய வில்லையே! கண் இருந்தும் குருடாக, காதிருந்தும் செவிடாக அவர் இருப்பதற்குக் காரணம் என்ன? காரணம் அறிந்தேன்; அவர் எண்ணும் எழுத்தும் அறியாதவர்; துவக்கப் பள்ளிக்கும் செல்லாதவர்.

இவ்வாறு பற்பல எண்ணிக்கொண்டு இரவு 10-30 மணிக்கு வீடு வந்து சேர்ந்தேன்; தூங்கிக்கொண்டிருந்த பாட்டியாரை எழுப்பினேன். எல்லாம் விளங்கக் கூறினேன். நான் பெற்ற இன்பம் அவர் பெறவில்லையானாலும், ஒருவாறு மகிழ்ச்சியடைந் தார். நான் சொல்லி முடித்த பின், பெருமூச்சு விட்டு அவர் பின்வருமாறு கூறினார்:

"நான் ஐந்தணு கொடுத்து, சினிமாவுக்குப் போய்ப் பார்ப்பதால் ஒரு பயனும் இல்லையே! நீ சென்று பார்த்து வந்து சொல்வதே எனக்கு நல்லது. சினிமா பார்க்கக் காதும் கண்ணும் போதும் என்றிருந்தேன். அது தவறு. கல்வியறிவு இன்றியமையாதது; உன் தங்கை கயற்கண்ணியை என்னைப் போல ஆக்கக் கூடாது. அவளுக்குக் கல்விக்கண் அளிக்க வேண்டும். அந்த வேலை என் பொறுப்பு; என் கடமை; என் துணிவு. அவள் கற்கும்போது, அவளுடன் நானும் சேர்ந்து சிறு குழந்தைபோல் நாடோறும் கற்றுவரப் போகிறேன்."

---

# 6. இருபத்தைந்தாம் தற்குறி

## (உரையாடல்)

இடம்: வேடப்பட்டி ஆவணக்களரி (சப்ரிஜிஸ்டரார் ஆபீஸ்.)

எழுத்தாளர்: கோவிந்தா! முருகக்கோனரைக் கூப்பிடு.

பணியாள்: முருகக்கோனர்! முருகக்கோனர்! முருகக்கோனர்!

[அவர் வருகிறார்.]

எழுத்தாளர்: ஐயா! உன் பெயர் என்ன?

முருகக்கோனர்: முருகக்கோனர் என்று சொல்கிறார்கள்.

எழுத்தாளர்: உன் வயது என்ன?

முருகக்கோனர்: என் வயது சரியாகச் சொல்ல முடியாது. போன தாது ஆண்டில் வந்த பஞ்சம் எனக்குத் தெரியும். அப்போது சிறு பையனாய் இருந்தேன். நீங்களே கணக்குப் போடுங்கள்.

எழுத்தாளர்: என்ன ஐயா! ஆவணத் தலைவர் போகும் நேரம் ஆகிறது. வயதைச் சொல். விரைவில் சொல். பெரிய தொல்லையாய் இருக்கிறதே!

முருகக்கோனர்: ஐயா! சினங்கொள்ள வேண்டாம். நினைப்பு இருந்தால் சொல்லிவிடமாட்டேனா?

எழுத்தாளர்: ஏறக்குறைய எழுபது இருக்குமா?

முருகக்கோனர்: இருக்கலாம் என்றுதான் எண்ணுகிறேன். என் வீட்டுக்காரி செத்துப்போய் பத்து வருடம் இருக்கும். அப்போது எனக்கு 62 வயது என்று பேசிக் கொண்டார்கள்.

# நீங்கள் விரும்புவது எது?



படியாத பிள்ளைகள்



படித்த பிள்ளைகள்

(சென்னை நூல்நிலைய சங்கத்தார் அன்பளிப்பு)

எழுத்தாளர் : உனக்குக் கையெழுத்துப் போடத் தெரியுமா?

முருகக்கோனுர் : ஐயா! நான் தற்குறி.

எழுத்தாளர் : இன்று வந்த இருபத்தைந்து பேரும் தற்குறிகளாக இருக்கிருர்களே! நன்ருக இருக்கிறது. இந்த ஆவணக் களரிக்கு வந்தது முதல் "தற்குறி தற்குறி" என்று கேட்டுக் கேட்டுக் காதும் மரத்துப்போய்விட்டது. ஆனல், எண்ணிப் பார்த்தாலோ, மிகவும் வருத்தமாக இருக்கிறது. இந்த நாடு என்று சீர்ப்படுமோ? இந்தத் தற்குறி நிலை என்று ஒழியுமோ? இப்படிப்பட்டவர்கள் வந்தால் இரட்டிப்பு வேலையாகிறது. இவர்களுக்கும் துன்பம்; நமக்கும் தொல்லை. பத்திரங்களைப் பதிவு செய்வதற்குள் போதும் போதும் என்று ஆகின்றது. கோவிந்தா! இந்தக் கிழவனிடம் கைக்குறி வாங்கு.

பணியாள் : முருகக்கோனுரே! இங்கே வாரும். பத்திரம் பதிவுசெய்ய வருகிறீரே! என்ன பயன்? பத்திரக் கூலி கொடுப்பதோடு எங்களுக்கும்...............ஐயா கோபமாக இருக்கிருர். கைக்குறி நன்ருக வை.

முருகக்கோனுர் : அப்படியே ஆகட்டும். எப்படியாவது வேலையை முடித்துவிடுங்கள்; இருட்டுவதற்குள் ஊருக்குப் போக வேண்டும்! என்ன செய்வது? நான் தற்குறி. உங்கள் உதவி இல்லாவிட்டால் முடியாது. நாங்கள் அந்தக் காலத்தில் பள்ளிக்கூடம் போகாமல், எழுதப்படிக்கத் தெரியாமல் வளர்ந்துவிட்டோம். இப்போது அங்கங்கே படுகிற துன்பங்கள் சொல்லமுடியுமா? போதும் நான் படும் பாடு. அந்த வரி, இந்த வரி என்று சொல்லி என்ன என்னவோ காகிதங்கள் கொடுக்கிருர்கள். அவைகளை வாங்கி எங்கேயாவது வைக்கிறேம். எல்லாம் காகிதங்களாகவே இருப்பதால் ஒன்றும் தெரிவதில்லை. பிறகு

"நாள் கடந்துவிட்டது; வரி செலுத்தவில்லை; அபாரதம் இவ்வளவு," என்று அபராதம் போடுகிறார்கள். சில வரிகளைச் செலுத்திவிட்ட பிறகு, மறுபடியும் வந்து, "இன்னும் வரி செலுத்தவில்லை; உடனே செலுத்த வேண்டும்; தவறினால் அபராதம்" என்று பொய் சொல்லி மிரட்டுகிறார்கள். உனக்கு நான் ஏதாவது உதவி செய்கிறேன். என்னை அவரிடம் அழைத்துப் போகாதே. கைக்குறி போதுமா? நான் காலையில் வந்தவன். இன்னும் கூழ் கஞ்சி ஒன்றும் அறியேன். நீங்கள் எல்லாரும் வருவதற்கு முன் இருந்து நான் இங்கே வந்து காத்திருக்கிறேன். பொழுது சாய்கிறது. நான் போகலாமா? சொன்னால் புறப்படுவேன்.

வேறொரு பணியாள்: பெரியவரே! அஞ்சவேண்டாம்; இதோ அனுப்பிவிடுகிறோம். உமக்குப் பின் வந்தவர்கள் போய் விட்டார்களே! ஐயா! படிப்பு இல்லாமற்போனால் இந்தக் காலத்தில் வாழ முடியுமா? உம் காலத்தை ஒருவாறு கழித்துவிட்டீர். உம்முடைய பேரன்மார்களுக்காவது படிப்புக்கு ஏற்பாடு செய்யும். அவர்களையும் தற்குறிகளாய் ஆக்கிவிட வேண்டாம்.

# 7. கிழவி பட்ட கடன்

## (உரையாடல்)

இடம் : முறை மன்றம்.

முறைமன்றத் தலைவர் :—என்ன அம்மா! நீ இவரிடம் நிலத்தை அடகு வைத்துக் கடன் வாங்கியது உண்மைதானே? கடனை எல்லாம் தீர்த்துவிட்டேன் என்று நீ சொல்லுகிறாய். பத்து ரூபாய் மட்டும் கொடுத்துச் செல் எழுதியதாக இவர் சொல்லுகிறார். உண்மையைச் சொல்; இவர் தமக்காக மூன்று பேரைச் சாட்சிகளாக அழைத்து வந்திருக்கிறார்.

கிழவி :—ஐயா! நான் கடன் வாங்கியது உண்மையே. ஆறு ஆண்டுகளாகச் சிறிது சிறிதாகக் கொடுத்துவிட்டேன். சென்ற ஆண்டில் பத்திரம் கெடு கடக்கப் போவதாகவும், இன்னும் கொடுக்க வேண்டிய இருபது ரூபாய் கொடுத்துவிட்டால் கடன் தீரும் என்றும் இவர் என்னிடம் சொன்னார். இருபது ரூபாயும் ஒரு வாரத்தில் கொடுத்துத் தீர்த்துவிட்டேன். ஆனால், போன வைகாசியில் எனக்கும் அவருக்கும் மனவருத்தம் ஏற்பட்டது. அப்போது, 'உன்னை இதோடு விடப்போகிறேனா பார்,' என்று இவர் சொன்னார். என்னவோ கோபத்தால் பேசுகிறார் என்று சும்மா இருந்தேன். ஆனால், அந்த வருத்தத்தை வைத்துக்கொண்டு இப்படி என்மேல் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

தலைவர் :—பத்திரத்தில் பத்து ரூபாய்க்கு மட்டும் செல் எழுதப்பட்டிருக்கிறது. மற்றைத் தொகைகள் கொடுத்ததற்கு ஒன்றும் காணோமே!

# நீங்கள் எதை விரும்புகிறீர்கள்?



படியாத பெண்கள்



படித்தபெண்கள்

(சென்னை நூல்நிலைய சங்கத்தார் அன்பளிப்பு)

கிழவி :—இவர் மிகவும் நம்பிக்கையானவர். ஆதலால் எப்போதும் செல் எழுதியதில்லை. தவிர எப்போதும் நான் பத்து ரூபாய் கொடுத்ததில்லையே. பதினைந்து ரூபாய் பதினைந்து ரூபாயாகக் கொடுத்து வந்தேன். கடைசியில் மாத்திரம் இருபது கொடுத்தேன்.

தலைவர் :—பத்து ரூபாய் கொடுத்துச் செல் வைத்ததை உன் கையெழுத்துச் சொல்கிறதே!

கிழவி : ஐயா! என்ன இது! எனக்குக் கையெழுத்தே தெரியாதே! எழுதப்படிக்க எனக்குத் தெரியாதே!

தலைவர் :—(பத்திரத்தில் கவனித்துப் பார்த்து) ஆம், ஆம். கையெழுத்து இல்லை; கைக்குறிதான். அதற்குஞ் சாட்சிகள் இருக்கிறார்கள், அவர்களை விசாரிக்கிறேன்.

[சாட்சிகளை அவர் விசாரிக்கிறார்: கிழவி குறுக்குக் கேள்விகள் கேட்கிறாள்.]

தலைவர் :—நீ செல் எழுதியது உண்மை என்றும், பத்து ரூபாய் மட்டும் கொடுத்தாய் என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால், நீ கடன் தொகையைக் கொடுக்கவேண்டும் என்றுதான் தீர்ப்புச் செய்கிறேன், போ அம்மா! கடனைத் தீர்த்துவிடு. தக்கவர்களைக் கொண்டு அவ்வப்போது செல் எழுது.

கிழவி :—ஐயோ! கடவுளே! இது பெரிய கொடுமையாக இருக்கிறதே! இந்த உலகத்தில் உண்மை இல்லையா? தலைவரும் இப்படித் தீர்ப்புச் செய்கிறாரே! என் வயிறு எரிகிறதே! நான் எப்படிப் பிழைக்கப் போகிறேன். இந்தக் கஷ்ட காலத்தில் மறுபடியும் பணம் சேர்த்து நான் கடன் கொடுக்க முடியுமா? பெரிய மனிதர்கள் பொய் சொல்லுகிறார்களே! இதுதானா சாட்சி சொல்லுவது? அவர்கள்

UNIVERSITY LIB

நல்லவர்களே! அவர்களை ஏன் நோவவேண்டும்? நான் வந்தவழி! எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டிருந்தால், இவ்வளவு ஏற்பட்டிருக்காது. "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு," என்று என்னைக் குருடியாக்கிவிட்டார்கள் பெரியவர்கள். இப்போது நான்தானே துன்பத்துக்கு ஆளானேன்!

---

# 8. அழியாச் செல்வம் எது?

செல்வம் என்பது என்ன? மக்கள் இவ்வுலகில் இன்பமாக வாழ்வதற்குத் துணையாக இருக்கின்ற பொருள்களையே செல்வம் என்று கூறுகிறோம். இச் செல்வம் நிலையுடையது அன்று! நிலையாமை யுடையது. இது சகடக்கால் போல மாறி மாறி வரும் இயல்பு உடையது. யானைமீது அமர்ந்து ஊர்வலம் வந்து உலகாண்ட மன்னர், பல்லக்குச் சுமக்கும் பணியாளர் ஆதலும் உண்டு. தலைமையும் மேன்மையும் பெற்று வாழ்ந்த பெருஞ் செல்வர், வறுமை அடைந்து, உண்ணும் உணவுக்கும் வழியற்று அன்ன சத்திரம் நாடித் திரிதலும் உண்டு. மலைபோல் குவிந்த பெருநிதி படைத்தவர், அனைத்தும் இழந்து அலைதலும் உண்டு. பல அடுக்குகளை உடைய மாளிகைகள், அடியோடு வீழ்ந்து அழிந்து கழுதைகள் மேய்கின்ற பாழ் நிலம் ஆதலும் உண்டு.

சில ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த! குவெட்டா, பீகார் பூகம்பங்கள் நமக்கு என்ன அறிவிக்கின்றன? ஐரோப்பாவில் நடைபெற்ற போரும், நடைபெறுகின்ற போர்களும் நமக்கு என்ன அறிவிக்கின்றன? ஆயிரக்கணக்கான ஆண்டுகள்வரை நிலைத்திருக்கும் என்று நம்பிய கட்டிடங்கள், வானளாவிய கட்டிடங்கள், நொடிப்பொழுதில் தரைமட்டமாவது எவ்வளவு எளிது என்று அவை அறிவிக்கின்றன அல்லவா? பல தலை முறைகளுக்கு இச்செல்வம் போதும் போதும் என்று எண்ணி மகிழ்ந்த செல்வர்களும் அவர்களுடைய குடும்பங்களும் இமைப் பொழுதில் இருந்த இடம் தெரியாமல் மறைவது எவ்வளவு எளிது என்று அவை அறிவிக்கின்றன அல்லவா? பணம், நிலம், வீடு முதலான செல்வங்களைக் காப்பதற்காக மக்கள் செய்யும் பாதுகாப்புக்கள் எவ்வளவு பயனற்றவை என்று அவை அறிவிக் கின்றன அல்லவா?

ஆதலின், அழியக்கூடிய செல்வத்தையே பெரிதும் நம்பி மக்கள் வாழ்வது அறியாமை. அழியக்கூடிய செல்வத்தைப் பெற்றவுடன், அழியாத செல்வத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும். அழியாச் செல்வம் எது? அது கல்வியே ஆகும். இதனை அறிந்தே பொருட் செல்வம், கல்விச் செல்வம் எனச் செல்வத்தை இருவகையாகப் பிரித்தனர் பெரியோர்.

பொருட் செல்வம் பலவகையாலும் அழியக்கூடியது. பெரு வெள்ளம், பெரு நெருப்பு இவற்றால் பொருட்செல்வம் அழிந்து விடும். ஆளுவோர் மனம் வைத்தால், செல்வனை ஓட்டாண்டி ஆக்க முடியும். கள்வர் முயற்சி செய்தால், செல்வனிடம் உள்ள வற்றைக் கவரமுடியும். இவ்வாறு பலவகையாலும் அழிவு ஏற்படாதவாறு அதைக் காப்பாற்றுவதோ எளிய வேலை அன்று; மிகமிக அருமையான வேலையாகும். இவையேயன்றி, அச் செல் வத்திற்குப் பாதுகாப்பு வேண்டுமானால், அதை உடையவர், கனவிலும் பிறர்க்கு ஒன்று கொடுக்காத உறுதி உடையவராக— கல்நெஞ்சு உடையவராக இருத்தல்வேண்டும். அன்பு, இரக்கம் முதலான நல்ல பண்புகள் உடையவராக இருந்தால்—இளகிய மனம் உடையவராக இருந்தால்—செல்வத்தை அவர் பாதுகாக்க முடியாது.

ஆனால், கல்விச் செல்வமோ அத்தன்மையானது அன்று. வெள்ளமும் நெருப்பும் கல்வியறிவை அழிக்கமுடியாது. ஆள் வோரும் அதைக்கொள்ள முடியாது. கள்வரும் அதைக் கவர முடியாது. கல்விச் செல்வத்தைப் பாதுகாப்பதோ எளிதே ஆகும். அதைப் பாதுகாப்பதற்குக் கொடிய மனம் வேண்டுவ தில்லை. ஏன்? பிறர்க்குக் கொடுத்தால் குறைந்துவிடுமே என்ற பயம் கல்விச் செல்வத்தைக் குறித்து எழாது; ஆனால், பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்க, அது மேன்மேலும் வளரும் ஆற்றலைக் கண்டு கற்றவர் மகிழ்ச்சி அடைவர். இதனாலேயே, திருவள்ளுவர்,

அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே; மற்றவை செல்வம் அல்ல என்று கூறியருளினர்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

எனவே, அறிவுடைய மக்கள் அனைவரும் கல்விச் செல்வத்தைப் போற்றுகின்றனர்; பிறரும் அதைப் பெறவேண்டுமென்று முயல்கின்றனர்.

இதனால், பொருட்செல்வம் வேண்டாம். கல்விச் செல்வமே வேண்டும் என்று கொள்ளவேண்டா. பொருட் செல்வம் அழியும்; கல்விச்செல்வம் அழியாது. ஆகையால் அழியும் செல்வத்தைத் தேடுவதோடு நில்லாமல், அதன் துணைகொண்டு அழியாச் செல்வத்தையும் தேடவேண்டும் என்பதே கருத்தாகும்.

"வெள்ளத்தால் அழியாது வெந்தழலால்
வேகாது வேந்த ராலுங்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
நிறைவின்றிக் குறைவு றாது
கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கோ
மிகஎளிது கல்வி என்னும்
உள்ளத்தே பொருளிருக்கப் புறம்பாகப்
பொருள்தேடி உழல்கின் றாரே."

# 9. படியாத வேலையாள்

(தலைவர்)

நான் சென்னைக்கு வந்து பதினைந்து ஆண்டுகள் ஆயின. வரும்போது ஊரிலிருந்து வேலையாள் ஒருவனை உடன் அழைத்து வந்தேன். அவன் குறிப்பு அறிந்து ஒழுகி என்னை மகிழ்வித்து வந்தான். ஆனால், சென்ற மார்கழித் திங்களில் உடல்நோயுற்றமையால் அவனால் வேலைசெய்ய இயலாமற் போயிற்று. தன் ஊருக்குத் திரும்பிச்செல்ல விடை தரவேண்டும் என்று பன்முறை அவன் என்னை வேண்டினான்.

அவனை விட்டுப் பிரிய எனக்குச் சிறிதும் மனம் இல்லை. ஆயினும், அவன் உடல் நிலை கருதினேன்; வேறு வழி அறியாது, அவனுக்கு விடைகொடுத்தேன்; கையில் முப்பது ரூபாய் தந்தேன்; இன்னும் பணம் வேண்டுமானால், கடிதம் எழுதுமாறு கூறினேன்.

பணத்தைப் பெற்றுக்கொண்டு, அவன் கண்ணீர்விட்டான்; மனமுருகியவனாய் நின்றான்; "உங்களிடம் இன்னும் பல ஆண்டுகள் வேலை செய்ய எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. என் தமையன் மகன் ஒருவன் ஊரில் வேலை இல்லாமல் வாளா இருக்கிறான். அவனுக்கு எழுதப் படிக்கத்தெரியாது. அஃது ஒன்று தான் குறை. ஆயினும், அவன் என்னைவிட நல்லவன்; வல்லவன். என் உடல் செம்மையான பிற்பாடு, ஒருநாளும் நான் ஊரில் தங்கியிருக்க மாட்டேன். உங்களை விட்டு நான் வேறிடம் போய் வேலை செய்யப்போவதில்லை. அதுவரைக்கும், என் தமையன் மகனை வேலையாளாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்," என்று கூறிப் புறப்பட்டான்.

என் மனம் இளகியது; அவன் வேண்டுகோளுக்கு ஏதேனும் காரணம் இருக்க வேண்டும் என்று எண்ணி நான் இசைந்தேன். இரண்டு நாள் கழித்து அவனுடைய தமையன் மகன் வந்தான். அவன் பெயர் கந்தன். அவன் அகத்தின் அழகை முகத்தால் உணர்ந்தேன்; உண்மை, பணிவு, கபடற்ற தன்மை முதலிய பண்புகள் உடையவன் எனத் தெரிந்து கொண்டேன்; எழுத்தறிவு இல்லாவிடினும் குறையில்லை. இத்தகைய வேலையாள்தான் வேண்டும் என எண்ணி மகிழ்ந்தேன்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாதலின், நான் வீட்டிலேயே தங்கியிருந்தேன்; அன்று கந்தனிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தேன்; வீட்டிற்கு வருகிறவர்களை வரவேற்க வேண்டிய முறை, கடிதங்கள் வந்தால் வாங்கிவைக்க வேண்டிய இடம், தொலைபேசியில் (டெலிபோனில்) யாரேனும் அழைத்துப் பேசினால், அவருக்கு மறுமொழி கூறும் வகை முதலியன எல்லாவற்றையும் விளக்கினேன்.


ஒரு நாள் காலையில் நான் வெளியே புறப்பட்டுச் சென்றேன்; மாலை 5 மணிக்கு வீடு திரும்பினேன். திரும்பி வந்தவுடன், கந்தன் என்னை அணுகி, "ஐயா, இன்று தொலைபேசியில் உங்களை ஒருவர் அழைத்தார். நீங்கள் சொன்னபடியே அந்தக் கருவியில் நானும் பேசினேன். நீங்கள் வெளியே போயிருப்பதாகத் தெரிவித்தேன்," என்றான்.

"பேசியவர் யார்?" என்று கேட்டான்.

"கண்ணப்பர் என்று அவர் பெயர் சொன்னார்," என்றான் கந்தன்.

"கண்ணப்பரா? எந்தக் கண்ணப்பர்? அந்தப் பெயருடையவர்கள் மூன்று பேர் இருக்கிறார்களே! கண்ணப்ப முதலியாரா? செட்டியாரா? வழக்கறிஞர் கண்ணப்பரா?" என்றேன்.

# இவ்விரண்டில் எதை விரும்புகிறீர்கள்?



படித்த ஆடவர்கள்




படியாத ஆடவர்கள்

(சென்னை நூல்நிலைய சங்கத்தார் அன்பளிப்பு)

"கண்ணப்பர் என்று பெயர் சொல்லி, வேறு எழுத்துக்களும் சொன்னார். அந்த எழுத்துக்கள் நினைவில் இல்லை," என்றான் கந்தன்.

"அடா! அவை தலைப்பு எழுத்துக்களாக இருக்குமே! தெரிந்திருந்தால் நன்றாயிருக்குமே! இப்போது ஒன்றும் செய்வதற்கில்லையே! பிறகு வேறு ஏதாவது சொன்னாரா!" என்றேன்.


"ஏதோ ஒரு தெருவில் 30-ஆம் எண் வீட்டில் மாலை 6 மணிக்குக் கட்டாயம் பார்க்க வேண்டும் என்று உங்களுக்குக் கூறும் படியாகச் சொன்னார்; அவசரமான வேலை இருப்பதாகக் கூறினார்; தவறாமல் பார்க்கவேண்டும் என்றும் சொன்னார்," என்றான் அவன்.

"என்ன இது தொல்லையாக இருக்கிறதே! தெருவின் பெயர் அறியாமல் வீட்டு எண் தெரிந்து பயன் என்ன? தெருவின் பெயர் நினைவு இல்லையா? அவசரமான வேலை கட்டாயம் போக வேண்டும் என்கிறாயா!" என்றேன்.

"தெருவின் பெயர் சொன்னார் அதையே சிறிது நேரம் நினைவில் வைத்துக் கொண்டிருந்தேன். அது நீண்ட பெயர்; எப்படியோ நான் மறந்து விட்டேன்," என்று அஞ்சிக் கூறினான் கந்தன்.

பேசினவர் யாராக இருத்தல் கூடும். எங்கே சென்று காணலாம் என்று நான் எண்ணி எண்ணிப் பார்த்தேன். ஒன்றும் விளங்கவில்லை. உடனே, மறுவேலை செய்யாமல் தொலைபேசியிடம் சென்று, கண்ணப்பர் என்ற பெயருடைய மூவரையும் தனித் தனியே அழைத்துப் பேசினேன். ஒருவர்தான் மறுமொழி கூறினார். ஆனால் அவர் என்னை அழைக்கவில்லை என்று கூறிவிட்டார். மற்றவர் இருவரும் வீட்டில் இல்லை என்று அறிந்து நான் வருந்தினேன்.

வேலையாள் முகத்தில் கவலைக் குறிகள் மிகுதலைக் கண்டேன்; "அப்பா! நீ ஒன்றும் கவலைப்படாதே. உன் சிற்றப்பனாக இருந்தால், உடனே எல்லாவற்றையும் எழுதி வைத்துக் கொண்டு, நான் வந்தவுடன் சொல்லிவிடுவான். நீயோ எழுதப் படிக்கத் தெரியாதவன். இனி ஒன்று செய். இனிமேல் தொலை



கந்தன் தவறாகப் பேதி மருந்தை உட்கொள்ளுதல்

பேசியில் யாராவது அழைத்தால், வீட்டில் என் மகன் செங்கோவையாவது, மகள் திருநாளம்மையையாவது அழைத்து வைத்துக்கொண்டு பேசு; அவர்களில் ஒருவர் எல்லாம் எழுதிக் கொடுப்பார்," என்று கூறித் தேற்றினேன்.

ஒருநாள் கந்தனுக்கு வயிற்றுப் போக்கு மிகுதியாக இருந்தமையால், மருத்தில்லம் (ஆஸ்பத்திரி) சென்று மருந்துபெற்று வந்தான்; செங்கோவுக்கும் பேதி மருந்து பெற்று வரச் சொன்னமையால் அதையும் உடன் பெற்று வந்தான். குறித்த வேளையில் மருந்து உட்கொள்ளச் சென்ற கந்தன், தன் மருந்து இன்னது என்று அறியாமல் செங்கோவின் பேதி மருந்தை உட்கொண்டான். வயிற்றுப் போக்கோ மிகுந்தது. அன்றிரவெல்லாம் தூக்கமின்றிக், கந்தன் வெளிக்குப் போய்க் கொண்டே இருந்தான். மறுநாள் காலையில் தன்னை அறியாமல் சோர்ந்து விழுந்தான். அதற்குள், செங்கோவுக்குக் காலையில் தரும் பொருட்டாக வைத்திருந்த மருந்தை எடுத்துவரச் சென்ற அவனுடைய தாய், அம் மருந்து அங்கே இல்லாமை அறிந்தாள். "வயிற்றுப் போக்கை நிறுத்த" என்று எழுதிய சீட்டு ஒட்டிய மருந்து இருப்பதையும் கண்டாள்! உடனே விரைந்து வந்து, கந்தன் மருந்து உட்கொள்ள வில்லையோ? என்று கேட்டாள். பிறகு, கந்தன் செய்த தவறு வெளியாயிற்று. உடனே அம் மருந்தை அவனுக்குக் கொடுத்துவிட்டு, சீட்டைப் படிக்கத் தெரியாமல் அவன் தானே தேடிக் கொண்ட துன்பத்தை நினைந்து வருந்தினேன்.

அடுத்த வாரமே, மற்றொரு நிகழ்ச்சியும் என்னை வருத்தியது. தமிழில் ஒரு விளம்பரமும், ஆங்கிலத்தில் ஒன்றும் எழுதி, முறையே "சுதேசமித்திரன்" நிலையத்துக்கும், "மெயில்" நிலையத்துக்கும் முகவரி எழுதி அவற்றைச் சேர்த்துவிடுமாறு ஏவினேன். அவை விரைவில் நாளிதழ்களில் வெளிவர வேண்டியவை. சிலநாள் கடந்தபின், அவ் விளம்பரங்கள் பயன்படா. ஆதலின், காலத்தாற் செய்து முடிக்க எண்ணி விரைந்தனுப்பினேன். கந்தனும், உடனே சென்று அந் நிலையங்களிலுள்ள கடிதப் பெட்டிகளிற் போட்டுவிட்டு மீண்டான். மூன்றாம் நாள்

நாளிதழ்களை விரித்து விரித்துப் பார்த்து நான் ஏமாந்தேன். நான்காம் நாள், ஐந்தாம் நாளிலும் ஒன்றும் வெளியிடப்பட வில்லை. ஆறும் நாள், "மெயில்" நிலையத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், "இஃது எமக்குச் சேர வேண்டுவது அன்று; ஆதலின் திருப்பியனுப்பப்பட்டுள்ளது" என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. மறுநாள், "சுதேசமித்திரன்" நிலையத்தி லிருந்தும் அத்தகைய கடிதம் ஒன்று வந்தது. உடனே, உண்மையை உய்த்துணர்ந்தேன். கந்தன் அக் கடிதங்களை உரிய இடங்களிற் சேர்க்கவில்லை. மாற்றிப் போட்டுவிட்டான் என்று அறிந்துகொண்டேன். எழுத்தறியாமையால், இத்தவறு செய்தான் என்று அறிந்து, நான் அவன்மீது குறை கூறவில்லை; இதைக் குறித்து அவனைக் கேட்கவுமில்லை.

ஆயினும், அவன், எனக்கும் தொல்லை விளைத்துத் தனக் கும் தீங்கு தேடிக்கொள்ளுதலைத் தடுக்க விரும்பினேன்; உடனே, முதல் வகுப்பிற்குரிய 'கழகப் புதிய தமிழ்ப் பாடம்-முதற் புத்தகம்' ஒன்று வாங்கித் தந்தேன்; செங்கோ, திருநா ளம்மை இருவர் உதவியால், நாடோறும் சில எழுத்துக்களையும் சொற்களையும் கற்றுவருமாறு கந்தனுக்குக் கூறினேன். அவன் உண்மையும் ஊக்கமும் உடையவன்; ஆகையால், உரைத்த படியே நாடோறும் முயன்று கற்றுவருகிறான். சித்திரைத் திங்களுக்குள் ஒருவாறு அவன் எழுத்தறிவு பெறுதல் திண்ணம், இனி, எனக்கும் தொல்லை விளையாது? அவனுக்கும் துன்பம் நேராது. எழுத்தறிவால், அவன் தனக்கும் பிறர்க்கும் பயன் படுவான்; சிறப்பும் பெறுவான்.

# 10. கல்லாதவர் வாக்குரிமை

## (உரையாடல்)

[வட ஆர்க்காடு ஜில்லா போர்டு தேர்தல் பற்றி]

(காவேரிப்பாக்கம் தேர்தல் நிலையத்தில் ஓட்டளித்த பின் பழனி முதலியார், எல்லப்பக் கவுண்டர், கோவிந்தசாமி நாயுடு, முருகையனூர் ஆகிய நால்வரும் வளவனூருக்குத் திரும்பிச் செல்கின்றனர். அவர்களுள், பழனி முதலியார் சிறிது கற்றவர். முருகையனூர் அவ்வூர்ப் பள்ளிக்கூட ஆசிரியர். மற்ற இருவரும் எழுத்தறிவு இல்லாதவர்.)


பழனிமுதலியார் :—என்ன கவுண்டரே! இன்று எனக்கு அரை நாள் வேலை கெட்டது. உமக்குக் குறை இல்லை; பொழுது போக்காக வந்து திரும்புகிறீர்!

எல்லப்ப கவுண்டர் :—நாள்தோறுமா வரப்போகிறோம்? மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இன்றுதானே தேர்தல் நடைபெற்றது! முன்பு நான் ஓட்டளித்தபோது, வேறு முறை இருந்தது. அப்போது யாரோ ஒரு முதலியார் தேர்தலுக்கு நின்றார், அவருக்காக ஓட்டுக் கொடுக்கப் போனேன். பெட்டிமேல் சீட்டுப் போட்டுவிட்டுத் திரும்பும் முறை அப்போது இல்லை. அங்கே இருந்த எழுத்தாளர், "உமக்கு எழுதப் படிக்கத் தெரியாது போலும்; விழிக்கிறீரே! யாருக்கு உமது ஓட்டு?" என்று கேட்டார். "முதலியாருக்கு" என்றேன் நான். "எந்த முதலியாருக்கு?" என்று அவர் கேட்டார். அதற்குள் என்னுடன் வந்தவர் மெல்ல எனக்குச் சொல்லிக் கொடுத்தார்.

முருகையனூர் :—என்ன! அந்த முதலியார் பெயரும் உமக்கு நினைவு இல்லையா?

எல் :—நினைவு இல்லை; அவர் வெளியூரார். பிறகு, அவர் சொல்லிக் கொடுத்தபடியே சொல்லிவிட்டேன்.

கோவிந்தசாமி நாயுடு :—வந்த ஒவ்வொருவரும் அப்படியே பெயர் சொல்லிவிட்டுப் போனார்களா? அப்படியானால், எந்தக்




ஓட்டு அளிக்கும் முறை

கட்சிக்கு ஓட்டுப் போட்டீர் என்பது தெரிந்துவிட்டிருக்குமே! மற்றக் கட்சிக்காரர் பகைத்துக் கொள்வார்களே!

எல் : படித்தவர்களுக்கு அந்தத் தொல்லை இல்லை. அவர்களே காகிதத்தில் எழுதிப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். படியாமையால், நான் அப்படிச் சொன்னேன். நீர் சொன்னபடி என்மீது மற்றக் கட்சியார் பகைகொண்டது உண்மையே. நம் ஊர் அழகண்ண செட்டியார் அதனாலே தான் மூன்று ஆண்டுகளாக என்னிடம் பேசுவதில்லை. இப்போது ஒருவருக்கும் தெரியாமல் அந்தச் சீட்டைப் பெட்டியின்மேல் போட்டுவிட்டு வந்தேன். யாரும் பகைத்துக்கொள்ள வழி இல்லை.

கோவி : என்ன ஐயா ! பெட்டிமேல் போட்டுவிட்டேன் என்கிறீரே ! அந்தப் பெட்டியின் உள்ளே போட வேண்டுமே ! அதில் சிறு வாய் ஒன்று தெரியவில்லையா ?

எல் : அப்படியா ! அதை நான் பார்க்கவில்லையே ! நீர் அதிலே தான் போட்டீரா ?

கோவி : நான் உள்ளே சென்றதும், அந்தப்பெட்டியின் வாயில் கட்சிக்காரர் கொடுத்த சீட்டை நுழைத்தேன். அது பெட்டிக்குள் போய்விட்டது.

முரு : என்ன ! இது வியப்பாக இருக்கிறதே ! கட்சிக்காரர் கொடுத்த சீட்டைப் போடக்கூடாதே! அதில் உம்முடைய பெயரும் எண்ணும் எழுதியிருப்பார்கள். அதை எழுத்தாளரிடம் கொடுத்திருந்தால், அவர் ஓட்டுச் சீட்டுக் கொடுத்திருப்பாரே !

கோ : ஓ! கொடுத்தாரே ! இதோ அதை வைத்துக்கொண்டிருக்கிறேன், பாரும் !

முரு : நல்ல வேலை செய்தீர் ! இதை வெளியே எடுத்துவந்ததே தவறு. கிழித்துப்போடும். இதைத்தான் பெட்டியில் போட்டிருக்கவேண்டும்.

பழனி : கவுண்டர் அதைப் பெட்டியின்மேல் போட்டுத் தேர்தல் தெய்வத்துக்கு அருச்சனை செய்தார். நாயுடு அதை அங்கே விடாமல் எடுத்துக்கொண்டு வந்துவிட்டார். பக்கத்து வீட்டுக் குழந்தைவேலன் என்ன செய்தான், தெரியுமா? அவனிடம் கட்சிக்காரர் ஏதோ பணம் கொடுத்தார்களாம். அந்தப் பணத்தை உண்டியில் போடுவதுபோலப் பெட்டியில் போட்டுவிட்டு வந்தானாமே! பெட்டிகளுக்கு நிறம்பூசி, சொல்வன எல்லாம் சொல்லியும் இவர்கள் இப்படிச் செய்கிறார்களே!

முரு : பெட்டிகளுக்கு நிறம் பூசியதே நமக்கு மானக்குறைவு அன்றோ? நம் நாட்டில் 100-க்கு 90 பேர் படிக்கவில்லை. அதை அறிந்தே நிறத்தைக் கொண்டாவது யாருக்கு ஓட்டுக் கொடுக்கவேண்டும் என்று படியாதவர்கள் தெரிந்துகொள்ளும் பொருட்டு, அரசியலார் இந்த முறையை ஏற்படுத்தியுள்ளனர். படியாதவர்களாலேதான் படித்தவர்களுக்கும் இந்த நாகரிகமற்ற முறை வந்து சேர்ந்தது. இப்படிச் செய்தும், பல தவறுகள் செய்கிறோம். 100-க்கு 100-பேர் கல்வி யறிவு பெறுகின்ற வரைக்கும் எந்தத் தேர்தலும் உண்மையான தேர்தல் ஆகாது; பயன்படாது. அடுத்த தேர்தலுக்குள், முதியவர் கல்வி இயக்கம் பெருகி நல்ல தொண்டு செய்தால், நாடு நலம் பெறும். நீங்கள் இன்று ஓட்டளித்த முறையை ஒருவருக்கும் சொல்லிவிடாதீர்கள். இந்தக் குறைதீர, இன்று தொட்டுக் கல்வி கற்கத் தொடங்குங்கள்; வயதைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். ஊக்கமிருந்தால் எண்பது வயது நிறைந்த கிழவனும் கற்கலாம். நானும் என்னால் இயன்ற உதவிசெய்ய முன்வருவேன். இன்றே படிக்கத் தொடங்குங்கள்.

# 11. கல்வியே கண்

எண்ணெழுத் திகழேல்.

கணிதத்தையும், இலக்கணத்தையும் இகழாமல் நன்ருகக் கற்றுக்கொள்.

ஓதுவ தொழியேல்.

அறிவுதரும் நல்ல நூல்களை நீ எப்பொழுதும் படித்துக் கொண்டிரு.

இளமையிற் கல்.

இளமைப் பருவத்திலேயே படிக்கத் தொடங்கிக் கற்பன கற்றுக்கொள்.

பேதமை அகற்று.

அறியாமையை நீக்கிவிடு.

வித்தை விரும்பு.

கல்வியாகிய நற்பொருளை விரும்பு.

—ஆத்திசூடி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

கணிதமும் இலக்கணமும் மனிதர்க்கு இரண்டு கண்கள் என்று சொல்லத்தகும்.

நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை.

நிலைபெறக் கற்றலாவது சொல்லுஞ் சொல் தவருமையாம்.

ஓதாதார்க் கில்லை உணர்வோடும் ஒழுக்கம்.

நல்ல நூல்களைப் படியாதவர்க்கு அறிவும் நன்னடையும் இல்லை.

—கொன்றை வேந்தன்.

ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.

நூல்களைப் படிக்காமல் ஒருபொழுதும் வாளா இருத்தல் கூடாது.

—உலகநீதி.

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்.

ஒருவனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியன் அவனுக்குத் தெய்வம் ஆவான்.

கல்விக் கழகு கசடற மொழிதல்.

ஒருவன் கற்ற கல்விக்கு அழகாவது தான் கற்றவைகளைக் குற்றமறச் சொல்லுதல் ஆகும்.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

பிச்சை எடுத்தாலும் கல்வி கற்பது நல்லது.

கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.

கல்லாதவன் தன் குலத்தின் மேன்மையைப் பாராட்டிப் பேசுவானாயின் அவன் பதர்போலப் பயனற்றவன் ஆவான்.

அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்

கல்வியறிவு உடையவனை அரசனும் விரும்புவான்.

—நறுந்தொகை.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்.
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நல் மரம்.

கிளைகளையும் கொம்புகளையும் உடையனவாய்க் காட்டினுள்ளே நிற்கின்ற அந்த மரங்கள் நல்ல மரங்கள் அல்ல. கற்றோர் சபையின் நடுவே ஒருவர் நீட்டிய ஓலையைப் படிக்க முடியாமல் நின்றவனும், பிறர் குறிப்பை அறியும் அறிவு இல்லாதவனும் நல்ல மரங்கள்.

....கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு.

கல்வி கற்ற புலவனுக்கு அவன் சென்ற எல்லா நாடுகளிலும் சிறப்பு உண்டாகும்.

—மூதுரை.

**1. வாழும் உயிர்க்குக் கண்கள் எவை?**

எண்ணும் எழுத்தும் வாழும் உயிர்க்குக் கண்கள் ஆகும்.

எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு.

**2. எவை கண்கள்? எவை கண்கள் அல்ல**

கற்றவர் முகத்தில் உள்ளவை கண்கள் ஆகும். கல்லாதவர் முகத்தில் உள்ளவை கண்கள் அல்ல; புண்கள் என்று கூறத் தகும்.

கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்உடையர் கல்லா தவர்.

**3. உயர்ந்தவர் யார்? தாழ்ந்தவர் யார்?**

ஆசிரியர் முன் தாழ்ந்து நின்றும் கற்றவர் உயர்ந்தவர். அவ்வாறு கல்லாதவர் தாழ்ந்தவர்.

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.

**4. கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் உள்ள வேறுபாடு எத் தன்மையானது?**

கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் உள்ள வேறுபாடு மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு போன்றது.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ(டு) ஏனை யவர்.

**5. எல்லாம் உடையவர் யார்? ஒன்றும் இல்லாதவர் யார்?**

அறிவுடையவர் எல்லாம் உடையவர். அறிவு இல்லாதவர் எவ்வளவு பொருள்களை உடையவராயினும் ஒன்றும் இல்லாதவர்.

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்உடைய ரேனும் இலர்.

—திருக்குறள்.

## கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு



வங்காளக் கவி தாகூர்
மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்குறள் கழகத்தில் 8—10—1922-இல் வரவேற்பளிக்கப் பெறுதல்
உட்கார்ந்திருப்பவர்களில் இடப்பக்கத்திலிருந்து
3-வது கவி தாகூர்; 4-வது தாகூர் சட்ட விரிவுரையாளர்
கா. சுப்பிரமனிய பிள்ளை, எம். ஏ., எம். எல்.

## கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு



↓ சர். சி. வி. இராமன்

ஸ்வீடனில் நோபல் பரிசு பெற்று, அப்பரிசு பெற்ற மற்றவர்களோடு நிற்றல்

ஸ்வீடன் மன்னர்

வீடு தோறும் கல்வியின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வி இலாததோர் ஊரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர் !

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்னர் உள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் !
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் !
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர் !
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர் !
மதுரத் தேமொழி மாதர்கள் எல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர் !
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெ ருந்தொழில் நாட்டுவம் வாரீர் !

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

[குறவஞ்சி மெட்டு, புன்னாகவராளி, பியாகு, கல்யாணி

முதலிய இசையிற் பாடுக]

("எங்கள் முத்துமாரி" என்ற பாரதி பாட்டுப்போல் பாடவேண்டும்)

எல்லாரும் கல்விகற்போம் இனியதமிழ் நாட்டீர்!
கல்வியிலார் உலகினிலே கடையரெனத் தாழ்வார் (எல்)

எண்ணெழுத்தும் கண்களன்றோ இதையறியார் உண்டோ
பெண்களுமே ஆண்களைப்போல் பெறவேண்டும் அறிவை

இருளடைந்த வீட்டினிலே இன்பம்என்றும் உண்டோ
தெருளில்லார் வாழ்க்கையிலே திருவுடைமை உண்டோ

ஆளழகும் அணியழகும் அறிவழகுக் கிணையோ
தோலழகால் யாதுபயன் சுவையழகே கனியாம். (எல்)

நாலெழுத்துக் கற்றுக்கொண்டால் நல்லதுண்டு வாழ்வில்
காலமெல்லாம் பொன்னாக்கிக் கல்வியினை வளர்ப்போம்

உலகமெங்கும் கல்வியினை உயிரெனக்காக் கின்றார்
பலகலைகள் பயிலுகின்றார் பண்புடன்வாழ் கின்றார். (எல்)

பதினைந்தில் ஒருவர்கூடப் படிக்கவில்லை இங்கே
இதுநமக்கு வெட்கமன்றோ முதியதமிழ் நாட்டீர்! (எல்)

நல்லநல்ல நூல்களிங்கே நயமுடனுண் டறிவீர்
சொல்லறியா ஊமரெனத் தோன்றலுமக் கழகோ. (எல்)

வள்ளுவரும் ஔவையாரும் வந்ததமிழ் நாட்டீர்
தெள்ளியதேன் போற்கவிதை செழித்ததமிழ் நாட்டீர் (எல்)

கல்விகற்க விரைந்திடுவீர் கன்னித்தமிழ் நாட்டீர்
கல்வியொன்றே நாமெல்லாம் கடைத்தேறும் வழியாம் (எல்)

## கற்ருேர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு



சிறுவர் கல்வித்துறையில் ஆராய்ச்சிமிக்க டாக்டர் மரியா மாண்டிசாரி அம்மையார் 30—11—'39-இல் சென்னை நகர்மன்றத்தினரால் வரவேற்பளிக்கப் பெறுதல்.
வரவேற்புத்தாள் வழங்குபவர் மேயர்
தி ... ளர் எஸ். சத்தியமூர்த்தி ஐயர், பி.ஏ., பி.எல்., எம். எல். ஏ. (எம். பி.)

## கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு



சுவாமி விவேகாநந்தர்

அமெரிக்க, சிகாகோவில்சமயவாராய்ச்சிப் பெருங்கழகத்தினரால்
11—10—1893-இல் வரவேற்கப் பெறுதல்

சாதிமதச் சண்டையில்லை சரிநிகராய் யாரும்
பேதமறக் கல்விகற்போம் பிரிவினையை ஒழிப்போம். (எல்)

வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம். (எல்)

எண்ணறிவீர் எழுத்தறிவீர் இயற்கலைகள் அறிவீர்
பண்ணறிவீர் பயனறிவீர் பதிநூல்கள் அறிவீர். (எல்)

பொல்லதெல்லாம் போயொழியும் புண்ணியங்கள் பொலியும்
நல்லதெல்லாந் தேடிவரும் நந்தமிழைக் கற்றால். (எல்)

பொன்னளிக்கும் பொருளளிக்கும் புகழெல்லாம் அளிக்கும்
சன்மார்க்க வாழ்வளிக்கும் சத்தியமாங் கல்வி. (எல்)

கற்கைநன்றே கற்கைநன்றே கைப்பிச்சை யேற்றும்
கற்றவர்க்கே வெற்றியுண்டு கல்விகற்க வாரீர்! (எல்)

—சுவாமி சுத்தானந்த பாரதியார்.

பண்: 'பித்தாபிறை சூடி'

எந்நாளும் அழியாத
இருஞ்செல்வம் கவியென்பார்
நன்றாகும் நாற்பொருளும்
நாடிவரும் இதனாலே. 1

கல்வியதன் சுவையுணர்ந்து
கற்றவரே புகழ்பெறுவார்
நல்வினையில் வயமாகி
நவிலரிய வீடுறுவார். 2

எண்ணினுடன் எழுத்துணரா
ஏழையர்தம் கண்களினைப்
புண்ணென்றே உலகுரைக்கும்
பொய்யல்ல இவ்வுரையே 3

தோண்டுவதால் மணலூறும்
    தூநீரின் தகைபோல
வேண்டியுணர் கல்வியினால்
    விளையுநல்ல அறிவென்பார். 4

உடையழகும் நடையழகும்
    உருவழகும் அழகல்ல
நடுநிலைமை தருங்கல்வி
    நல்லழகே அழகாமே. 5

வாழ்நாளோ சிறிதளவாம்
    வருத்தும்பிணி பெரிதுளவாம்
ஊழ்போக்கும் உயர்கல்வி
    உணராதசெயல் என்னே. 6

கண்போன்ற பல நூல்கள்
    கருத்தாகப் பயிலாதார்
மண்பாவை போலிந்த
    மாநிலத்திற் கிடப்பாரே. 7

—சி. து. கன்னிசாமி.

# 12. கல்வி இல்லையேல் வாழ்வில்லை

கண் இல்லாதவர் ஒளியைக் காணுதல் இல்லை; கல்விக் கண் இல்லாதவர் அறிவொளியைக் காணுதல் இல்லை. ஒவ்வொரு துறையிலும் படியாதவர் படும் பாட்டால் இவ்வுண்மை விளங்குகின்றது.

அரசியல் துறையில் மக்களுக்கு அறிவு மிக மிக இன்றியமையாதது. குடியரசு வேட்கை பெருகிவரும் இக் காலத்தில் அரசியல் அறிவு பெறாத ஒருவன் வாழ்வு பயனற்ற வாழ்வாகும். ஆட்சிக்கு உரிய மக்களுள் ஒருவனாக அவனைச் சேர்த்து எண்ணுவதைவிடச் சேர்க்காமல் மரம், கல் முதலியவற்றோடு எண்ணிவிடுதலும் நலமே. தெருவில் திரியும் வேலையாள் முதல் பள்ளிக்கூட ஆசிரியர் வரை எல்லோருக்கும் அரசியல் அறிவுவேண்டும்; உழுவோர், நெய்வோர், பிற கைத்தொழில் செய்வோர் அனைவர்க்கும் அந்த அறிவு வேண்டும். அனைவரும் அரசியல் அறிவு பெறாதவரை குடியரசு முறையும் வேறெந்த முறையும் உண்மையால் பயன்தரல் இயலாது.

சட்ட சபை நிகழ்ச்சிகளைப் பற்றிக் கல்வியறிவு இல்லா மக்கள் கவலை கொள்வதே இல்லை. அந்நிலை ஒழிதல் வேண்டும். அங்கு நிறைவேறும் சட்டங்களைப் பற்றியும், திருத்தங்களைப் பற்றியும் அறியா மக்கள் வாக்குரிமை பெற்றுத் தேர்தல் காலங்களில் ஓட்டு அளிப்பதால் என்ன பயன் விளையும்? ஆதலின் நாளிதழ்களை (தினசரிகளை)ப் படித்தறிந்து, நாட்டை ஆளும் சட்டங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையை மக்கள் அடைதல் வேண்டும். அதற்குக் கல்வி யறிவு இன்றியமையாததாக உள்ளது.

இக்காலத்தில் உள்ள போலீஸ் நிலையம் (போலீஸ் ஸ்டேஷன்), முறை மன்றம் (கோர்ட்), ஆவணக் களரி (சப் ரிஜிஸ்டிரார் ஆபீஸ்), கூட்டுறவுச் சங்கம் (கோவாப்ரேடிவ் சொசைட்டி) நகர நாட்டாண்மைக் கழகங்கள் (ஜில்லா போர்டு முனிசிபாலிடிகள்), மருத்தில்லம் (ஆஸ்பத்திரி), பேங்கு, அஞ்சல் நிலையம் (தபாலாபீஸ்) முதலியன பற்றிக் கல்வியறிவில்லா மக்கள் பலவகையாலும் இடர்ப்படுகின்றார்கள். தாங்கள் செலுத்தும் வரிகளாலும் கட்டணங்களாலும் அவை நடைபெறுகின்றன என்பதை அவர்கள் அறியார்; அவற்றால் பெற வேண்டிய பயனைப் பெற்றுப் பாதுகாப்புடன் வாழவும் அறியார்; பிறர் தங்களுக்குச் செய்யும் தீங்குகளினின்றும் உய்ய வழி அறியாமல் ஏங்குகிறார்கள். அவர்கள் உணவிருந்தும் உண்ணாமல் வாடுகிறவர்களைப் போல், எல்லாம் இருந்தும் ஒன்றும் இல்லாதவர்களாய் வருந்துகிறார்கள். பொறித் துறை (எஞ்சினீரிங்), மராமத்து (பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட்), உப்புத் துறை (சால்ட் டிபார்ட்மெண்ட்) முதலிய நிலையங்களாலும் அவர்கள் பயன் பெறுதல் இல்லை.

பண்டைக் காலத்தில் மக்களுள் பெரும்பான்மையானவர் உழவுத்தொழில் செய்தனர்; வருவாயில் ஆறிலொரு பகுதி வரியாகச் செலுத்திவிட்டு வாழ்ந்தனர். இக் காலத்திலோ, வரிகள் மிகப் பல; வரிகளைச் செலுத்த வேண்டிய முறைகளும் மிகப் பல; வரி முறைகளை அறியாவிடில், மக்கள் பல தொல்லைகளுக்கு ஆளாகி வருந்த நேர்கிறது. உரிய நாள் கடந்தால், அரசியலார் ஒறுத்தல், கைச்சாத்துப் பெறுவிடின் மீண்டும் பணம் கட்டுதல் முதலியன அவர்களுக்குப் புதியன அல்ல. கல்வியறிவு இல்லாத குறையால் இவை யாவும் விளைகின்றன.


பிறப்பிறப்புக் கணக்கரிடம் (Registrar of Births and Deaths) சென்று பிறப்பையும் இறப்பையும் தெரிவிக்கும் முறை மக்கள் பலர்க்குத் தெரியாது. அவர்கள் அங்ஙனம் தெரிவிக்கத்

# படியாத குடும்பம்



தபால்காரன் வந்தான். தலைவன் மணியார்டரில் தற்குறி வைக்கிறான். ஒருவர் சாட்சியாகப் பக்கத்திலிருக்கிறார். தலைவியும் பையனும் தங்கட்கு வந்த கார்டைத் தபால்காரனைப் படிக்கச் சொல்லிக் கேட்கின்றனர். குழந்தை சில பொருள்களை வைத்துக் கொண்டு விளையாடுகிறது.

# படித்த குடும்பம்




தபால்காரன் வந்தான். தலைவர் மணியார்டரில் கையெழுத்திடுகிறார். தலைவி கடிதம் படிக்கிறார். பெரிய பையன் தினசரிப் பத்திரிகை படிக்கிறான். சின்னபையன் புத்தகக்கட்டைக் கிழிக்கிறான். பெரிய பெண் மாதப் பத்திரிகை படிக்கிறாள். குழந்தை படப் புத்தகத்தைப் பிரித்துப் படம் பார்க்கிறது.

தவறினால், அரசியலார் அவர்கள்மீது வழக்குத் தொடர்ந்து ஒறுக்கின்றனர்.

கல்வி யில்லாதவர்கள் பெருஞ் செல்வர்களாக விளங்குதல் இல்லை. முன்னோர் திரட்டிய செல்வத்தைப் பெற்றவர்களாயினும், அவர்கள் அதனை எளிதில் இழந்து விடுகிறார்கள்: இன்றேல், அச் செல்வத்தால் பெறத்தக்க பயனைப் பெறாமல், வீணாக அதனை இரவும் பகலும் கவலையோடு காத்துக்கொண்டு வருந்துகிறார்கள் ; கடன் கொடுத்து வாங்குதலை மேற்கொண்டவர்களோ, கணக்கு அறியாமையால் உள்ளதும் இழந்து உள்ளம் நோகிறார்கள். அச் செல்வத்தால், அவர்கள் இன்பம் அடைவதில்லை. இது பற்றியே, திருவள்ளுவர், அறிவில்லாதவர்கள் எவ்வளவு செல்வம் உடையவர்களாய் இருப்பினும் இல்லாதவர்களே என்றும், அறிவுடையவர்கள் வறியவர்களாய் இருப்பினும் எல்லாம் உடையவர்களே என்றும் கூறியுள்ளார்.

“அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்”

புகை வண்டி, நீராவிக்கப்பல், வானவூர்தி (ஆகாயக் கப்பல்), தந்தி, தொலைபேசி, ஒலிபரப்பி முதலியவற்றாலும், பல்வேறு பொறிகளாலும் (இயந்திரங்களாலும்) கல்வியறிவில்லா மக்கள் என்ன பயன் பெறுதல் கூடும்? அவர்கள் இருபதாம் நூற்றாண்டில் வாழ்கிறவர்களாயினும், இந் நூற்றாண்டின் விஞ்ஞான உலகத்தில் வாழ்கிறவர்கள் அல்லர். மின்மரங்களில் (எலக்டிரிக் தூண்களில்) “அபாயம்—(Danger)” என்று எழுதியுள்ளதைப் பற்றியும், புகை வண்டிகளில் உள்ள அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பற்றியும் அறியாமல், வலிந்து துன்பந் தேடிக்கொள்ளும் நிலையில் கல்லா மக்கள் வாழ்கிறார்களே ?

கிராமமக்கள் நிலையை யாவரும் அறிவர். “உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்,” “உழவே தலை” என்ற செம்மொழிகள்

பிறந்த நாட்டில், இக் காலத்தில், உழவு உதவாத் தொழிலாக உள்ளது; உழவு செய்தும் உயிர்வாழ முடியுமோ என்ற ஐயம் எழுந்துள்ளது. இதற்குக் காரணம் என்ன? உழவர்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தித் தங்கள் நிலையை உயர்த்திக்கொள்ளவும், அனைவரும் ஒன்றுபட்டுத் தங்கள் குறைகளை அரசியலார்க்குத் தெரிவித்துக்கொள்ளவும், வரிச் சுமையைக் குறைக்கச் செய்து கவலை தீர்ந்து வாழவும், மற்ற நாட்டினரைப்போல் புது முறைகளையும் கருவிகளையும் கொண்டு தொழிலை வளம்படுத்தவும் அறியாதவர்களாய் வருந்துகிறார்கள். அவர்களிடையே கல்வியறிவு பரவினாலன்றி, இந் நிலையை ஒழித்தல் கூடுமோ?

புறம்போக்கு நிலங்கள், காடுகள், மலைகள் முதலியவற்றை எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது என்பதை அறியாக் கிராம மக்கள், பிறர் கூறும் வழியில் நடந்து, சில வேளைகளில் அரசியலாரிடம் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறார்கள். கல்வி யறிவு உடையவர்கள் இவ்வாறு கண்மூடி வாழ்ந்து துன்புறக் காரணம் இல்லை.

கல்லா மக்கள் தங்கள் அறியாமையினால் பல்வகையான தொத்துநோய்கட்கு இடங் கொடுத்துவிட்டுப் பின்னர் வருந்துகிறார்கள்; குறிசொல்வோரை அணுகி அவர் கூறுவன வெல்லாம் நம்பி அவரால் அச்சுறுத்தப்பட்டு, அறமும் பொருளும் இழந்து இடர்ப்படுகிறார்கள்; உடல் நலத்திற்கும் செய்தொழிலுக்கும் ஊறுபயக்கும் கொடிய மூடநம்பிக்கைகளில் ஆழ்ந்து தாழ்கிறார்கள்; திருமணம் முதலியவற்றிற்காக அளவுமீறி வீண் செலவு செய்து கடனாளிகளாகி வாழ்நாள் முழுதும் கவலையுறுகிறார்கள்.

வணிகர்க்கு எழுத்தறிவு இன்றியமையாதது என்பதைக் கூறவேண்டுவதில்லை. விளம்பரங்கள் வாயிலாக வருவாயைப் பெருக்குதல், உரிமை (Copyright) களைப் பதிவு செய்து வாணி

பத்தைச் சிறப்பித்தல், புதுமையாய்க் கண்டவற்றிற்குத் தனியுரிமை (Patent) பெற்று விளக்கமுறுதல், வணிகக் குறி (Trade mark) அமைத்துச் சீர்பெறுதல் முதலியவற்றால் மேனாட்டு வணிகர் முன்னேற்றம் அடைகின்றனர். நம் நாட்டு வணிகரும் அங்ஙனம் முன்னேற இடமுண்டு; ஆனால், கல்வியறிவு நிரம்பாமை பெருந்தடையாக உள்ளது. பொருள்களை வெளியே அனுப்புதல், வெளியிலிருந்து வருவித்தல் முதலியவற்றிற்கும் கல்வி யறிவு வேண்டுமன்றோ?

நெசவாளிகள் முதலான தொழிலாளிகள் முதலாளிகளிடம் அகப்பட்டுக்கொண்டு துன்பம் அடைதற்கும் கல்வியின்மையே காரணம் ஆகும். முதலாளிகளிடம் பட்ட கடனைச் சிறிது சிறிதாகத் தீர்த்து வரும்போது கணக்கு எழுதிவைக்கத் தெரியாமையால், அவர்கள் இறுதியில் திகைத்து நிற்கிறார்கள். மூலப் பொருள்களை வாங்குதல், செய்பொருள்களை விற்றல் முதலியவற்றில் அவர்கள் கண்ணற்றவர்களாய் வருந்துகிறார்கள். நகரங்களுக்குச் சென்று பால் விற்றல் முதலான தொழில் செய்வோர், திங்கள்முடிவில் கணக்கு அறியாமல் படும் இடர்களுக்கு எல்லை உண்டோ? பாடுபட்டு உழைத்தும் பயன்பெற முடியாமல் வாடும் மக்களுக்குக் கல்விக் கண் இன்றியமையாதது அன்றோ?

இலங்கை, நேட்டால், மலேயா, பிஜி முதலான நாடுகளில் உள்ள ரப்பர் கரும்பு தேயிலை காப்பித் தோட்டங்களில் வேலையாட்களாக மக்கள் பலர் இங்கிருந்து செல்கின்றனர். அவர்கள் கண்காணிகளின் ஏமாற்றுப் பேச்சுக்களை நம்பி வெளிநாடுகளுக்குச் சென்று கண்ணீர் விட்டுக் கதறுகிறார்கள்; இருந்த இடத்தில் இருக்கவும் அறியாமல், சென்ற இடத்தில் சிறக்கவும் தெரியாமல் வாடி வருந்துகிறார்கள்.

அவர்கள் கல்வி கற்றிருந்தால், சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெற முடியும் அன்றோ?

மருந்துகள் முதலியவற்றைப் பயன்படுத்தும் முறை, பொறிகளையும் அவற்றின் பகுதிகளையும் வருவித்துப் பூட்டும் முறை ஆகிய இவற்றைக் கல்லாதவர் அறிதல் இயலாது அன்றோ?

ஒருவர் தாம் கண்ட புதுமையை எழுதி வைத்தால் அன்றோ பிற்காலத்தில் அது பலர்க்கும் பயன்படும்? கல்லாதவர் காணும் புதுமை அவரோடு மறைந்து மண்ணாகின்றதே!

ஒரு குடும்பம் முன்னேற வேண்டுமானால், பெண் மக்கள் கல்வியறிவு உடையவர்களாக இருத்தல் வேண்டும். கல்வி கற்ற தாய் தன் மக்களை அறிஞராக்குதல் கூடும்; இவ்வுண்மை அறிஞர் பெருமக்கள் வரலாறுகளால் நன்கு விளங்குகிறது. இந்நாடு ஔவையார், காரைக்காலம்மையார், ஆண்டாள் முதலான பெண்மக்கள் பிறந்து வாழ்ந்து அறிவொளி பரப்பிய நாடு என்பதை அறிந்து, அனைவரும் பெண்கல்வியைப் போற்றுதல் வேண்டும். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு ஏன்" என்றும் "பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே" என்றும் வழங்கும் இழிமொழிகளை ஒழித்தல் வேண்டும்.

ஒரு நாட்டை ஆளும் மக்களாக விளங்குவோர் கல்வியறிவு உடையவர்களே. கல்லா மக்கள் எண்ணிக்கையில் பெருகினாலும், பிறரால் ஆளப்படும் அடிமைகளாகவே விளங்குவார்கள்.

நமக்கு முன் வாழ்ந்த பெரியோர்கள் வாழ்வை நாம் அறிதல் வேண்டும். அவர்கள் வாழ்வு நமக்கு வழிகாட்டியாகும். அவர்களைக் காண்பதும் கேட்பதும் அவர்களோடு பழகுவதும் இப்போது கூடுமோ? ஒருவகையால் கூடும். அவர்கள் இப்போது நூல்களின் வடிவாக விளங்குகிறார்கள். அந் நூல்களைச்

கற்றலும் கேட்டலும் வேண்டும். அப் பேறு எவர்க்கு உண்டு? கற்றவர்க்கே உண்டு; மற்றவர்க்கு இல்லை.

ஆதலால், மக்கள் கல்வி கேள்வி இன்றிக் குருடர்களாய்ச் செவிடர்களாய் வாழும் நிலை, இந் நாட்டில் இனியும் நீடித்தல் கூடாது. அதனை ஒழித்தலே நமது முதற் கடமையாகும்.

கீழ்வரும் புள்ளிகளை ஆராய்ந்தால், நம் நாட்டு மக்கள் எவ்வளவு பிற்போக்கான நிலையில் இருக்கிறார்கள் என்பது தெரியும். 1931-ஆம் ஆண்டு எடுத்த மக்கள் கணக்கின்படி,

| | | |
|---|---|---|
| இங்கிலாந்தில் படியாதவர் | 100-க்கு | 6 பேர் |
| அமெரிக்காவில் ,, | ,, | 5 பேர் |
| ரஷ்யாவில் ,, | ,, | 2 பேர் |
| ஜெர்மானியில் ,, | ,, | 1 (ஒருவர்) |
| ஜப்பானில் ,, | ,, | 3 பேர் |
| இந்தியாவில் ,, | ,, | 90 பேர் |

நம் நாட்டில் 100-க்கு 90 பேர் எழுத்தறிவு இல்லாதவர் என்றால், அறிவொளி நிரம்பிய பிற நாட்டினர் நம்மை மதிப்பாரோ? என்னே நம் நாட்டின் நிலை?

எழுத்துக்களைக் கூட்டிப் படிக்கவும், கடிதங்கள் எழுதவும் தெரிந்து கொள்வதால் மட்டும் அறிவொளி நிரம்பிவிடும் என்று எண்ணுதல் கூடாது. நாட்டில் உள்ள கல்லாமையைப் போக்குவதற்கு ஏற்ற வழிகளெல்லாம் அறிந்து முயற்சி செய்தல் வேண்டும்.

பரோடா சிற்றரசு நமக்குத் தக்க வழிகாட்டியாக விளங்குகிறது. தொடக்கப் பள்ளிகளைப் பெருக்குதல், முதியோர் கல்வி இயக்கத்தை வளர்த்தல் என்பவற்றோடு மட்டும் நிற்பதால் மக்களுக்கு அறிவு நிரம்பவில்லை என்பதை நன்கு உணர்ந்தார் பரோடா மன்னர். அவர் பட்டத்தில் உள்ளது போன்ற நூற்றுக்

கணக்கான நூல் நிலையங்கள் ஏற்படுத்தினர். அந் நூல் நிலையங் களில் சிறுவர்க்கெனவும் முதியோர்க்கெனவும் பெண்களுக் கெனவும் பல பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அந் நூல் நிலை



பரோடா மன்னரும் அவரமைத்த தபோய் நகர நூல்நிலையமும்

யங்கள் மக்களால் பெரிதும் போற்றப்படுகின்றன. அறிவுக் கடவுளின் திருக்கோயில்களாக அவை விளங்குகின்றன.

ஆந்திர மக்கள் ஆர்வமுடன் தங்கள் நாட்டில் கல்வியறிவைப் பரப்ப முனைந்துவிட்டார்கள். வங்காளிகள் மொழிப்பற்று மிக்க வர்களாய், கல்லாமை இல்லா நிலையை அடைய மடிதற்று முந்துற்று உழைக்கிறார்கள். அண்மையில், பம்பாயில் 598 முதி யோர் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டுத் தொண்டாற்று கின்றன. ஐக்கிய மாகாணத்தில் அனைவரும் ஒன்றுபட்டு இத்

துறையில் உழைத்து வருகின்றனர்; ஓராண்டிற்குள், படித்த ஒவ்வொருவரும் படியாத ஒருவரையாவது படித்தவராகச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்துள்ளனர். பீகார் மாகாணத்தில், சென்ற இரண்டரை ஆண்டுகளில் 8,479 முதியோர் பள்ளிக்கூடங்கள் நிறுவப் பெற்றுள்ளன; அங்கே கல்லாத முதியோருள் இதுவரை 3,19,983 பேர் கற்றவராய்விட்டனர்; சிறைக்கூடங்களில் உள்ள குற்றவாளிகளுள், 5,076 பேர் கல்வி பெற்றுள்ளனர்.

ஆனால், நம் தமிழ் நாடோ தூங்குகிறது. இன்னும் தூக்கமா? தமிழ் மக்கள் நிலையை உன்ன உன்ன உள்ளம் குழைகிறதே! உலகிற்குக் கலையறிவை ஊட்டிய தமிழ் மக்கள், உலகில் முதன் முதலில் எழுத்து வடிவம் பெற்ற மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழ் மக்கள், மொழிகள் பலவற்றுக்குத் தனிப்பெருந் தாயாய் இலங்கும் மொழியைப் பேசும் தமிழ் மக்கள், உலக மொழிகள் எல்லாவற்றையும் விட எழுதப் படிக்கக் கற்றல் எளிதாக உள்ள ஒரு மொழியைப் பயிலும் தமிழ்மக்கள் எழுத்தறிவு இல்லாது வாழ்தல் தகுமோ? இந்நிலை ஒழிக! நன்னிலை எய்துக! தமிழ் மக்களே எழுங்கள்! அனைவரும் முயலுங்கள் அறிவொளியைப் பரப்புங்கள்!!

75972

Book supplied by the University
Central Co-op. Stores, Madurai.

MADURAI UNIVERSITY LIBRARY
FEB 1972